Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

National TAMIL DAILY    தேசிய தினசரி

போன 389    தபாற் பெட்டி எண்: 49

மலர் 3    யாழ்ப்பாணம்    பிலவ கார்த்திகை 1 ஆம் நாள்    ஜ. ஆகிர் 7    (16-11 61)    வியாழக்கிழமை    இதழ் 235

நாவிற்கு ருசியும்
உடலுக்கு உறுதியும்
அளிப்பது
மொணரு அன் ரோஸ்
பப்படங்கள்
மயில், ரோஸ் மூவர்ண அடையாளங்களைக் கவனித்து வாங்குக.
கண்டிப்பகுதி விநியோகஸ்தர்கள்:
ஜெகஜோதி அன் கோ.
குருதெனியா.

# இலங்கையர்களுக்கு அடையாளக் கார்டுகள்

## 1 கோடி 20 லட்ச ரூபாய் செலவாகும்!

### செனட் சபையில் குடியேற்ற வெளியேற்ற மசோதா விவாதம்

கொழும்பு, புதன்

"இலங்கையில் தற்போது சுமார் 3000 சட்ட விரோதக் குடியேற்றக்காரர்கள் வசிப்பதாக மதிப்பிடப்படுகிறது. நாட்டை எதிர் நோக்கியுள்ள அபாயத்தை முன்னிட்டே குடியேற்ற வெளியேற்ற சட்டதிருத்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது. நாட்டின் எல்லாப் பிரஜைகளுக்கும் புகைப்படங்களுடன் அடையாளக் கார்டுகள் வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது" என பிரதமர் ஸ்ரீமதி பண்டாரநாயக்கா இன்று செனட் சபையில் பேசும்போது கூறினுர்.

செனட்டர் நடேசன்:- நாடற்றவர் பற்றிய நிலைமை என்ன?

பிரதமர்:- சட்டபூர்வமாக இங்கிருப்பவர்களுக்கு அடையாளக் கார்ட்டுகள் வழங்கப்படும். அடையாளக்கார்ட்டுகள் வழங்குவதற்காக அரசாங்கத்துக்கு 120 லட்சம் ரூபாய் செலவாகும். சட்டவிரோதக்குடியேற்றப் பிரச்சினை தீருமானல், தடுப்பு முகாமில் சட்டவிரோத குடியேற்றக்காரர்களுக்கு அளிக்கக்கூடிய அரிசிக்காகும் செலவு மிச்சப்படும். அந்த மிச்சப் பணத்தைக்கொண்டு அடையாளக்கார்ட்டுகள் வழங்கும் செலவைச் சரிக்கட்டலாம்.

"இந்தப் பிரச்சினை தீர்க்கப்பட்டால், சட்டவிரோதக் குடியேற்றத்தடுப்பு நடவடிக்கைகளுக்கு ஆகும் செலவும் மிச்சமாகும் அப்பணத்தைக்கொண்டும் இதை ஓரளவு சரிக்கட்டலாம்."

"தலைமன்னர் தடுப்புமுகாமில் சட்டவிரோதக் குடியேற்றக்காரர்கள் எனச்சந்தேகிக்கப்படும் 150 பேர் வைக்கப்பட்டிருக்கிறுர்கள். இலங்கையில் கள்ளக்குடியேற்றத்தைத் தடுப்பதில் இந்திய அரசாங்கமும் கண்டிப்பான நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறது. இலங்கைக்கு வருவதிலுள்ள அபாயங்கள் பற்றிய பிரசுரங்களை இந்திய அரசாங்கம் அங்குள்ள மக்களுக்கு விநியோகித்து வருகிறது" என்று கூறிய பிரதமர், "லங்கா சமசமாஜக் கட்சி, சமஷ்டிக்கட்சி ஆகியவற்றின் திருத்தங்களை அரசாங்கம் ஏற்கமுடியாது" என்றும் தெரிவித்தார்.

செனட்டர் மாணிக்கத்தின் ஒரு கேள்விக்குப் பிரதமர் பதிலளிக்கையில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த சகலரும் விடுதலை செய்யப்பட்டுவிட்டதாகக் கூறினுர். பின், செனட் சபை டிசம்பர் 5-ம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

# தமிழ் எம். பி. க்களின் முக்கிய சந்திப்பு

## 17ந் திகதி கொழும்பில் நடைபெறும்

யாழ்ப்பாணம், வியாழன்

தடை செய்யப்பட்டுள்ள தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த முக்கியஸ்தர்களின் சந்திப்பொன்றை இம் மாதம் 17-ம் திகதி கொழும்பில் நடைபெறலாமெனவும் இதில் முக்கிய பல விஷயங்கள் பற்றி ஆலோசிக்கப்பட்டு முடிவு செய்யப்படவிருப்பதாகவும் கட்சி வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது. இச் சந்திப்பில் உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் உட்பட அனேக தமிழ் எம். பி.க்களும், தமிழ்ப் பிரமுகர்களும் கலந்துகொள்ளலாமெனச் சொல்லப்படுகிறது.

இம் மாதம் 17-ம் திகதி ஆரம்பமாகும் பார்லிமெண்ட் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக தமிழரசுக் கட்சி எம். பி. க்கள் கொழும்புக்குச் செல்லவிருக்கிறுர்கள். அன்று இச் சந்திப்பு நடைபெறுமெனத் தெரிகிறது. சென்ற பல மாதங்களின்பின் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் 17-ந் திகதி ஆரம்பமாகும் பார்லிமெண்ட் கூட்டத்தில் மீண்டும் கலந்துகொள்ளுவாரென அறியப்படுகிறது.

சென்ற பெப்ரவரி மாதம் 20-ம் திகதி சட்டவிரோதமாகக் கூடியதாகவும் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. எம். ஸ்ரீகாந்தாவையும்,

(8-ம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாணம் பொலிஸ் அதிகாரி திரு. ஆண்டையும் அவர்களது கடமையைச் செய்யவிடாது தடுத்ததாகவும் குற்றஞ் சாட்டி நான்கு எம். பி.க்கள் மீதும் ஒரு வழக்கறிஞர் மீதும் சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை எதிர்த்து வாதாடுவதா? இல்லையா? என்பது பற்றிய இறுதி முடிவும் மற்றும் பல முக்கிய விஷயங்கள் பற்றியும் இச் சந்திப்பின்போது முடிவு செய்யப்படுமெனத் தெரிகிறது.

திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் பொது வரவேற்பில் கலந்து கொள்வதற்காக விமானத்தில் 18-ம் திகதி யாழ்ப்பாணம் வந்துசேருவார். விமான நிலையத்தில் அவருக்கும் வரவேற்பளிக்கப்படுமென்றும், மாநகரசபையில் சகல தமிழரசுக் கட்சி எம். பி. க்களுக்கும் பொதுவரவேற்பொன்று அன்று நடாத்தவும் ஏற்பாடாகியுள்ளதாகவும் தெரிகிறது.

## ஓய்வு பெறும் உதவி அதிபருக்கு பிரியாவிடை

### சேவைநல அபிவிருத்தி சங்கம் நடவடிக்கை

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாண அரசாங்க உதவி அதிபர் திரு. ஏ. டி. மூர்த்தி சேவையிலிருந்து ஓய்வு பெறுவதை முன்னிட்டு இன்று யாழ்ப்பாணம் கச்சேரியிலுள்ள சேமநல அபிவிருத்திச் சங்கத்தினர் ஒரு பிரியாவிடை வைபவத்தை நடாத்தினர்.

திரு. ஏ. டி. மூர்த்தியுடன் ஓய்வு பெறும் திருவாளர்கள் எஸ். இலங்கைநாயகம் (ஓ ஏ.) ஜே. எச். ஏ. அழகரத்தினம் (ஈ. ஓ. ஏ.) திரு. இரத்தின சபாபதி (சிருப்பர்) ஆகியோரின் சேவை பற்றி திருவாளர்கள் எம். ஆழ்வாப்பிள்ளை, ஜே. எம். சபாரத்தினம் ஆகியோர் குறிப்பிட்டுப் பேசினர் ஓய்வு பெறுவோர்கள் பாராட்டுக்கு நன்றி தெரிவித்தனர்.

திருவாளர்கள் ஏ டி. மூர்த்தி, எஸ். இலங்கைநாயகம் ஆகியோரின் உருவப்படங்களை அரசாங்க அதிபரும் வடமாகாண இணைப்பு அதிகாரியுமான லெப்டினன்ட் கேர்னல் உடுகம திரை நீக்கம் செய்து வைத்தார்.

வைபவத்தில் கச்சேரி உத்தியோகஸ்தர் எல்லோரும் கலந்துகொண்டனர்.

## திரு. ஸி.பி.டி' சில்வா

கொழும்பு, புதன்

காணி, விவசாய மந்திரி திரு. ஸி. பி. டி' சில்வா இன்றிரவு ரோமாபுரியிலிருந்து கொழும்பு வந்து சேர்வார்.

# தமிழர் பெருமையை பாதுகாக்கும் பொதுசன நூல் நிலையம்

## கொடிதினத்தில் நிதியுதவுமாறு பொது மக்களுக்கு மேயர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாண பொதுசன நூல்நிலைய விருத்திக்காக நூல்நிலைய இயக்கத்தாரால் கொடிதினம் ஒன்றினை யாழ்ப்பாணம் முழுவதிலும் நடாத்த ஏற்பாடாகியுள்ளது. இத்தினத்தை மாணவர்களுக்கென நவம்பர் மாதம் 29-ந் திகதியும், பொதுமக்களுக்கென டிசம்பர் மாதம் 2-ம் திகதியும் நடாத்த ஏற்பாடாகியுள்ளது.

யாழ்ப்பாண பொதுசன நூல்நிலைய கொடித்தினம் சம்பந்தமாக யாழ்ப்பாணமேயர் திரு. டி. எஸ். துரைராசா பொதுமக்களுக்கென ஓர் பொது வேண்டுகோளை விடுத்துள்ளார். அதில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:-

தமிழ் மக்களின் பாரம்பரியத்தின் பெருமைக்கும், எதிர்காலவளர்ச்சிக்கும் பொருந்தக்கூடிய ஒரு நூல் நிலையத்தை அமைக்கவேண்டும் என்பது யாழ்ப்பாண நூல்நிலைய இயக்கத்தை ஆரம்பித்து வைத்தவர்களின் பெருநோக்கமாகும்.

கட்டட நிர்மாண சிற்பியின் திட்டப்படி யாழ்ப்பாணபொதுசன நூல்நிலையக் கட்டடத்தை நிறைவேற்றுவதற்குப் பத்து இலட்சம் ரூபா தேவைப்படுவதால், அதன் முதல் ஒரு பகுதியை நிறைவேற்றுவதென மாநகரசபை தீர்மானித்தது. முதலாவது கட்டத்தை நிறைவேற்றுவதற்காக மாநகரசபை செய்துள்ள ஒப்பந்தத்தின்படி தொகை ரூபா 415,819 - 33 சதமாகும். இப்பொழுது மாநகர சபையாரிடம் உள்ள தொகை ஆக ரூபா 408,031 - 79 சதமாகும். ஆகவே கட்டடத்தை நிறைவேற்ற மேலும் ரூபா 7,787 - 54 சதம் தேவைப்படுகின்றது. இக் கட்டடத்தின் மத்தியில் ஒரு 10 அடி ஆரமுள்ள வில்மச்சு மண்டபமும் இருபுறங்களிலுமுள்ள படிக்கட்டின் மேல் இரண்டு 7 அடி

(8-ம் பக்கம் பார்க்க)

# "மசோதா அமுலானல் தமிழர்களும் முஸ்லிம்களும் கஷ்டமடைவர்"

## விவாதத்தில் பல செனட்டர்கள் பேச்சு

கொழும்பு, புதன்

குடியேற்றவெளியேற்ற சட்ட திருத்த மசோதா செனட்டில் நீதி மந்திரி திரு. ஸாம். பி. ஸி. பெர்னண்டோவினல் இரண்டாவது தடவையாகச்சமர்ப்பிக்கப்பட்டது. அப்போது அவர் தெரிவித்ததாவது:-

"சட்டவிரோதக் குடியேற்றத்தைமேலும் தடுக்குமுகமாகவே இந்தத் திருத்த மசோதா கொண்டுவரப்பட்டுள்ளது. இங்கு வரும் சட்ட விரோதக் குடியேக்காரருக்கு உதவியளிப்பவர்களையும், அவர்களை இங்கு கூட்டிவருபவர்களையும் அவர்களுக்கு வேலை கொடுப்பவர்களையும் கைது செய்து தண்டிக்க இந்த மசோதா இடமளிக்கிறது. சட்டவிரோத குடியேற்றக்காரர்கள்மீது தொடரப்படும் வழக்குகளை

(8ம் பக்கம் பார்க்க)

## கிரிக்கெட்

பம்பாய், நவ. 15

இங்கு இந்தியாவுக்கும் இங்கிலாத்துக்குமிடையே நடைபெற்றுவரும் முதலாவது கிரிக்கெட் டெஸ்போட்டியின் இரண்டாம் இன்னிங்ஸில் இங்கிலாந்து கோஷ்டி இன்றைய விளையாட்டு முடிவில் 3 விக்கெட் நஷ்டத்துக்கு 12 ரன்கள் எடுத்தது.

முதல் இன்னிங்ஸில் இங்கிலற்ந்து 8விக்கெட்நஷ்டத்திற்கு 500ரன்களெடுத்தது. இந்தியா முதல் இன்னிங்ஸில் 390ரன்கள் எடுத்தது.

## உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம் நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணநந்தர்,
கைலாசபிள்ளையார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.


## காலியாக இருக்கும் இடம் எத்தனை என்பதை அறிவிக்குக!

கொழும்பு, செவ்வாய்

றேயல், ஆனந்தா, நாலந்தா, சாகிரா உட்பட 20 பாடசாலைகள் தமது கல்லூரிகளிலுள்ள வகுப்புகளில் எவ்வளவு மாணவர்களுக்கு புதிதாக இடம் உள்ளது என்பதை விளம்பரப்படுத்துவார்கள்.

இருக்கும் இடங்கள் பற்றி மட்டுமின்றி எந்தமொழிமூலம் பயிற்றுவிக்கலாம் என்பது பற்றியும் தெரிவிக்குமாறு கல்லூரி அதிபர்கள் கேட்கப்பட்டுள்ளார்கள்,

பிரவேசப் பரீட்சைகள் எப்பொழுது நடைபெறும் என்பது பற்றியும் இக்கல்லூரிகள் விளம்பரம் செய்யும்.

---

## ல. தோ. தொ. யூனியன் மகாநாடு

பண்டாரவளை, புதன்

லங்கா தோட்டத்தொழிலாளர் யூனியன் அப்புத்தளைக் கிளையின் இரண்டாவது ஆண்டு நிறைவு விழா 26-ம் திகதி அப்புத்தளையில் நடைபெறவிருக்கிறது.

ஏறக்குறைய பத்தாயிரம் தொழிலாளர்கள்வரை பங்குபற்றவிருக்கும் இம்மகாநாட்டில் வெளிநாட்டுப் பிரமுகர்களும் இ. தொ. ச. சம்மேளன முக்கியஸ்தர்களும் பங்குபற்றுவார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

விழாவில் பலவித விளையாட்டுக்கள், நாடகம் முதலியவை இடம்பெறுவதோடுசங்கத்தின் முக்கிய அம்சங்களை விளக்கி தலைவர்கள் சொற்பொழிவும் இடம்பெறுமென அறிவிக்கப்படுகிறது.

---

## வேலையில்லாத் திண்டாட்டம் பற்றிய ஆராய்ச்சி

கொழும்பு, செவ்வாய்

சர்வதேச தொழில் ஸ்தாபனத்தின் தொழில்நுட்ப உதவித் திட்டத்தின் விளைவாக 1959-ம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் இலங்கையின் வேலையில்லாத் திண்டாட்டம் முதலிய பற்றி ஓர் ஆராய்ச்சி ஆரம்பமாகியது. இவ்வாராய்ச்சியின் விளைவாகத் தயார் செய்யப்பட்ட விசேஷ அறிக்கையொன்று வெகு விரைவில் அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்படும். இலங்கையிலுள்ள வேலையில்லாத் திண்டாட்டம், வேலையாட்கள் போதாக்குறை வேலை நேரம் ஆகியபற்றி ஆராய்ச்சி செய்யப்பட்டு அறிக்கை தயாராகியுள்ளது. அபிவிருத்திக்கான முறையில் கொள்கைகளையும் திட்டங்களையும் அரசாங்கம் மாற்றிக் கொள்வதற்கு உதவுவதற்கே இந்த ஆராய்ச்சி செய்யப்பட்டது. இவ்வருடம் மே மாதத்திலேயே ஆராய்ச்சி வேலைகள் முடிவடைந்துவிட்டன. வெகு விரைவில் அரசாங்கத்திடம் அறிக்கை சமர்ப்பிக்கப்படும். இந்த ஆராய்ச்சி காரணமாக 280,203 ரூபாய் செலவாகியுள்ளதாகத் தெரிகிறது.

## தங்கம் கள்ளக் கடத்தல்

### சுங்க அதிகாரி கண்காணிப்பு

கொழும்பு செவ்வாய்

கொழும்பு காங்கேசன்துறை தலைமன்னார் வழியாக தங்கம் கள்ளக் கடத்தல் செய்வோர் மீது சுங்க அதிகாரி அதிக கண்காணிப்புடன் இருந்து வருகிறார் எனத் தெரிகிறது. தங்கம் கள்ளக் கடத்தல் செய்வோர்கள்பற்றி சர்வதேசப் பொலிஸ சுங்க அதிகாரிகளுக்கு அறிவித்து வருவதாகத் தெரிகிறது.

இந்தியாவிலிருந்து ஆகாய விமானமூலம் இலங்கை வருபவர்களே பெரும்பாலும் கள்ளமாகத் தங்கம் கடத்துபவர்கள்என சர்வதேசப் பொலீஸ் வட்டாரங்கள் கூறியுள்ளன.

தங்கம்கள்ளக்கடத்தல் செய்பவர்கள் மிகவும் நுட்பமான வழிகளைக் கையாளுகின்றனர் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இங்கு தங்கத்துக்கு அதிகம் கிராக்கி உள்ளபடியால்தான் தான் இங்கு கள்ளக் கடத்தல் செய்யப்படுகின்றது. கப்பல் சாரதிகள்மூலமும் தங்கம் கடத்தல் செய்யப்படுவதாகத் தெரியவந்துள்ளது.

---

## கிராமப்புறங்களில் கல்வி வசதி கிடையாது

—டாக்டர் குருகே

கோட்டே, செவ்வாய்

"கல்விக்காக தனது வருமானத்தில் பெரும்பகுதியைச் செலவுசெய்த ஒரே நாடு இலங்கைதான். எல்லோரும் இலவசக் கல்விபெற வசதியளிக்கப்பட்டாலும் நகரப் புறங்களிலுள்ள மாணவர்களே இதனால் முழுப்பலனையும் அடைந்தார்கள். கிராமப்புற மாணவர்களுக்கு தமது திறமையை வெளிப்படுத்தக்கூடிய அளவு வாய்ப்பு கிடைக்கவில்லை தேசிய கல்வித்திட்டம் இப்பிரச்சினைகளைத்தீர்க்க வழி செய்யுமென நாம் நம்பலாம்

இவ்வாறு கல்வி அமைச்சின் உதவிக்காரியதரிசி டாக்டர் ஆனந்தா குருகே விகார வித்தியாலயத்தில் நடைபெற்ற சித்திரக் கைப்பணிக் கண்காட்சியைத் திறந்து வைத்த பின்னர் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது:—

கிராமப் புறங்களிலுள்ள பாடசாலைகளில் கல்விபோதிக்கும் சிங்கள ஆசிரியர்கள் பெரிதும் கஷ்டத்துக்குள்ளாக வேண்டியிருக்கிறது.

அடிப்பதற்கு மணி இல்லாததால் ஒரு பாடசாலையில் ஆசிரியர் கைதட்டவேண்டிய நிலை ஏற்பட்டதை நான் அறிவேன்.

---

## ஜனநாயகம் நசுக்கப்படுகிறது

### ஆர். ஜி. குறைபாடு

கொழும்பு, செவ்வாய்

'அரசாங்கத்திடம் இவ்வளவு வசதிகளிருந்தும் தேசியமயசேவைகளை முறையாகச் செய்ய முடியாது போயிற்று' என தம்பதேனியா எம். பி. திரு. ஆர். ஜி. சேனநாயக்கா கொழும்பு கிராண்ட் ஓறியண்டல் ஹொட்டலில் நடைபெற்ற சுங்க போக்குவரத்து கண்ட்ருக்டர்களின் சங்க வருடாந்த பொதுக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார். அவர் மேலும் பேசியதாவது:-

தேசியமயத் திட்டத்தின் மூலம் பெரும் நன்மைகளை பொதுமக்கள் எதிர்பார்த்தார்கள். ஆனால் அவர்களது எதிர்பார்ப்புக்கள் சிதைக்கப்பட்டன. தேசியமயம் தொழிலாளர்களுக்கு பெரும் இடையூறுகளை விளைத்துள்ளது. தேசியமயத் திட்டங்களெல்லாம் முதலாளி வர்க்கத்தால் ஆதிக்கம் செலுத்தப்படுகிறது.

துறைமுகத் தொழிலாளர் அரசாங்கத்திடம் நம்பிக்கை இழந்துள்ளார்கள். இப்பொழுது நிலவிவரும் பொருளாதார நிலைமைபற்றி திருப்தியற்ற நிலையில் அவர்கள் இருக்கின்றனர்.

நாட்டில் அதிகரித்து வரும் வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்சினைக்கு அரசாங்கம் தீர்வுகாண முடியாதிருக்கிறது. பயங்கரமான சூழ்நிலையே இங்கு உருவாகிக்கொண்டு வருகிறது.

பிரச்சினைகள் அதிகரிக்க அதிகரிக்க ஜனநாயகம் மேலும் மேலும் நசுக்கப்படுகிறது.

## "ஏகபோக உரிமை வர்த்தகத்தில் இப்போது இல்லை"

தெல்தெனியா, செவ்வாய்

"நியாயமான விலைக்குப் பொருள்களை விநியோகம் செய்வதே கூட்டுறவு இயக்கத்தின் நோக்கமாகும். இவ்வாறு செய்வதனால் வாழ்க்கைச் செலவைக் குறைத்து தேசிய வருமானத்தை அதிகரிக்கலாம்".

இவ்வாறு வேரகந்தோட்டையில் கூ. மொ. வி. ஸ்தாபனக் கிளையொன்றைப் புதிதாகத் திறந்து வைத்துப் பேசுகையில் வர்த்தக உணவுக் கப்பல் மந்திரி திரு. டி. பி. இலங்கரத்ன கூறினார். திரு. இலங்கரத்ன மேலும் கூறியதாவது:

"இதுவரை இறக்குமதி வர்த்தகம் வெளிநாட்டு முதலாளிகளின் ஏகபோக உரிமையாக இருந்துவந்தது. ஆனால் இப்போது முன்னைய விலையிலும் அரைப்பங்கு விலைக்கு மக்கள் புடவை, கருவாடு போன்ற பொருட்களை வாங்கக்கூடியதாக விருக்கிறது.

வறியவர்களுக்கும் பணக்காரர்களுக்குமிடையே உள்ள வித்தியாசங்களைக் குறைப்பதே அரசாங்கத்தின் நோக்கமாகும்.

காலஞ்சென்ற பிரதமரின் கொள்கைகளைக் கடைப்பிடிக்கவும் எமது அரசாங்கம் விரும்புகிறது.

ஏழை மக்களின் நன்மைக்காகவே மக்கள் வங்கி ஆரம்பிக்கப்பட்டது. மக்களுக்கு இன்றைய அரசாங்கம் எத்தனையோ நன்மைகளைச் செய்யவிருக்கிறது. எதிர்க்கட்சி சார்பினரது பிரசார மொழிகளினால் பொதுமக்கள் ஏமாந்துபோகக்கூடாது."

---

## கல்வி முறையில் குழப்பம்: திசமகாராமை எம். பி. கண்டனம்

திசமகாரம, செவ்வாய்

"கல்விமுறை ஒரே குழப்பம் நிறைந்ததாக இருக்கிறது. கல்விக் கொள்கை எப்பேற்பட்டது என்பதை ஒருவரும் விளங்கிக் கொள்ள முடியாது. தேசிய கல்வி முறை எவ்வாறு அமுல் செய்யப்படும் என்பதையும் ஒருவரும் அறிந்து கொள்ள முடியாது."

இவ்வாறு திசமகாரம எம். பி. திரு. லக்ஷ்மன் ராஜபக்ஸ கஜநாயக்கமவில் புதிய பள்ளிக்கூடமொன்றின் திறப்பு விழாவின்போது பேசுகையில் கூறினார். திரு ராஜபக்ஸ மேலும் கூறியதாவது:

பௌத்த கலாச்சாரங்களைக் கொண்ட ஒரு சிங்கள நாட்டில் ஒரு முஸ்லிம் கல்விமந்திரியாக இருத்தல் கூடாது. அத்தோடு கல்விமந்திரி மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒருவராக இருக்க வேண்டும். மக்களால் தெரிவு செய்யப்படாத 5 மந்திரிகளைக் கொண்ட இந்த அரசாங்கம் எவ்வாறு தன்னை ஒரு 'ஜனநாயக அரசாங்கம்' என்று கூறிக் கொள்ள முடியும்? நிதிமந்திரி தாம் தமது சொந்த அரசாங்கத்தை உருவாக்குவார் எனக் கூறியுள்ளார். இப்படியான மிரட்டல்களுக்கு ஒரு ஜனநாயக நாட்டில் இடமே இல்லை. இலாகாத் தலைவர்கள் தமது காரியாலயங்களில் வீண் நேரம் கழிக்கிறார்கள். எமது கடிதங்களுக்கு அவர்களிடமிருந்து பதில்களைக்கூட நாம் எதிர்பார்க்க முடியாது. திட்டவட்டமான முடிவுகள் எதையும் அரசாங்கம் தமக்குக் கூறுவதில்லை எனவும் எனவே தாம் எதுவித நடவடிக்கைகளையும் எடுக்க முடியாது எனவும்அவர்கள் கூறிக்கொள்கிறார்கள். தமக்கு எதிராக அரசாங்கம் நடவடிக்கை எடுக்கக்கூடும் என்று பயந்தே அவ்வாறு செய்கிறார்கள்.

---

இன்றைய கல்வி மந்திரியை நியமித்துள்ளதற்கு திரு. ராஜபக்ஸ பிரதமரைக் குறை கூறினார். "எமது நாட்டின் சுதந்திரத்துக்கும் ஜனநாயகத்துக்கும் போராட வேண்டிய காலம் இப்போது ஏற்பட்டுள்ளது" எனத் திரு. ராஜபக்ஸ கூறினார்.

## சாந்திநிகேதன் பரீட்சைகளை

### ஸ்ரீபாலியில் நடாத்தயோசனை

மகாரகமை, திங்கள்

ஹொரணையிலுள்ள ஸ்ரீபாலி நுண்கலைப் பள்ளிக்கூடத்தை இந்தியாவிலுள்ள சாந்திநிகேதனின் கிளைப்பள்ளிக்கூடமாக்கும் முயற்சிகளில் ஸ்ரீபாலி நுண்கலைப் பள்ளிக்கூட நிர்வாகி திரு. வில்மட் ஏ. பெரேரா ஈடுபட்டுவருகிறார். ஸ்ரீ பாலியில் கல்விபயின்றுவருவோர் சாந்திநிகேதனின் 'டிப்ளோமா' பரீட்சைக்கு இலங்கையிலிருந்தே தோற்றுவதற்கு வழிவகுக்குமாறு திரு. வில்மட் பெரேராகோரிவருகிறார்.

புதிய செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டங்களினால் இவ்வருடம் சாந்திநிகேதன் செல்லவிருந்த இலங்கை மாணவர்கள் பலர் தமது எண்ணத்தைக் கைவிடவேண்டியதாயிற்று. இசை, நாட்டியம், ஓவியம் ஆகிய கலைகளில் சாந்திநிகேதன் நடத்தும் டிப்ளோமா பரீட்சைகளுக்கு இலங்கை மாணவர்கள் இங்கிருந்தே வெளிமாணவர்களாகத் தோற்றுவதற்கான திட்டமொன்றை திரு. பெரேரா வரையறை செய்துள்ளார். இலங்கை மாணவர்களின் செயல்முறைப் பரீட்சைகளை சாந்திநிகேதன் ஆசிரியர் ஒருவர் இங்கு வந்து நடாத்துவது என்பதே திரு பெரேராவின் திட்டம். ஸ்ரீ பாலியில் மணிப்புரி நாட்டிய வகுப்புக்களை ஆரம்பிப்பதற்கு திரு பெரேரா ஒழுங்குகள் செய்துவருகிறார். இதற்காக ஒரு 'மணிப்புரி' நாட்டிய ஆசிரியரை இந்தியாவிலிருந்து இங்கு அனுப்புமாறு இந்திய அரசாங்கத்தைத்திரு.பெரேரா கேட்டுள்ளார்.


10,000,000 மக்களும் விரும்பி வாங்குவன!
இலங்கை முழுவதும் புகழ் பரப்புவன!
எவை?

டொலர்

ALUMINIUM INDUSTRIES (CEYLON) LTD.
ONE DOLLAR
DOLLAR BRAND

பவுண் அடையாளம் உள்ள
அலுமினியப் பாத்திரங்களே!
ஏன்?

டொலர் அலுமினியம் மாற்று உயர்ந்தது சுத்தம் உள்ளது

டொலர் அலுமினியம் அழகு அமைப்பு கண்கவர்ச்சி உள்ளது!!

டொலர் அலுமினியம் உறுதி உழைப்பு உத்தரவாதம் உள்ளது!!!

எல்லாவற்றிற்கும் மேல்

உங்கள் தாய்ப் பொன்னாட்டில் மாவிட்டபுரத்தில்
நவீன முறையில் செய்யப்படுவது!

டொலர் பவுணை பார்த்து வாங்குங்கள்
எங்கும் கிடைக்கும்

டொலர் மாத்திரமே
உத்தரவாதமானது!

தயாரிக்குமிடம்:

அலுமினியம் இன்டஸ்றீஸ்லிமிட்.
மாவிட்டபுரம். யாழ்ப்பாணம்
J. D. 3.

# ஸ்தலஸ்தாபனங்களுக்கிடையில் பாரபட்சமெதுவும் காட்டமாட்டேன்

## அமைச்சர் அறிவிப்பு

குருநாகல், செவ்வாய்

"ஸ்தாலஸ்தபன மந்திரி என்ற மட்டில் நான் காலஞ் சென்ற பிரதமரின் கொள்கைகளைப் பின்பற்றி வருகிறேன். ஸ்தல ஸ்தாபன சபைகளுக்கு நிதி வழங்கும் போது அரசியல் துவேஷங்கள் காரணமாக எதுவித பார பட்சமும் காட்டக்கூடாது என்ற காலஞ் சென்ற பிரதமர் வகுத்த கொள்கையை நான் கடைப் பிடித்து வருகிறேன்".

இவ்வாறு ஸ்தலஸ்தாபன வீடமைப்பு அமைச்சர் திரு. மகாநாம சமரவீர ஹிரிப்பிட்டியாவில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் கூறினார்.

ஹிரிப்பிட்டிய கிராம சபையின் முன்னாள் தலைவரும் புதிய ஜே. பி.யுமாகிய மோகன்லால் குணதிலகாவுக்கு அளிக்கப்பட்ட விருந்துபசார வைபவத்தில் ஸ்தலஸ்தாபன வீடமைப்பு மந்திரி பேசினார்.

அவர் மேலும் கூறியதாவது:

"ஹினிப்பிட்டியா கிராமசபையின் தலைவர் எஸ். எல். எப். பி. யினராக இல்லாத போதும் கிராம சபைக்கு வேண்டிய பண உதவி யாவும் வழங்கப் பட்டுள்ளது. ஸ்தலஸ்தாபன சபை நிதிகளைப் பாரபட்சமின்றி வழங்கியுள்ளமைக்கு இது ஒரு தக்க உதாரணமாகும்".

தனி வீடுகள் கட்டுவதற்கு எமது இலாகா 2,000 ரூபாய் வழங்க முன்வந்ததை யு என். பி. வன்மையாகக் கண்டித்தது ஆனால் யு என் பி நினைத்தும் இராத இப்பணத் தொகையை நாம் இன்று வழங்கி வருகிறோம்.

---

# பிரச்சினைகள் தீர்ந்தபாடில்லை இன்றைய அரசாங்கம்பற்றி டாக்டர் என். எம்.

வத்தளை, செவ்வாய்

"யு. என். பி. இன்றைய அரசாங்கத்தைக் கவிழ்த்துவிட முயற்சிக்கிறது. யு. என். பி. யின் சதிவேலைகளையிட்டு மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்".

இவ்வாறு டாக்டர் என். எம். பெரேரா பெலியகொடையில் நடைபெற்ற எல். எஸ். எஸ். பி. கூட்டமொன்றில் பேசுகையில் கூறினார். டாக்டர் என். எம். மேலும் கூறியதாவது:

"யு. என். பி. இப்போது தொழிலாளர் மீது அதிக சிரத்தை காட்டி வருகிறது. தொழிலாளர் மீது அதிக கருணையும் காருண்யமும் காட்டுவதாக நடந்து கொள்கிறது. ஆனால் முன்பு ஆட்சிப் பீடத்திலிருந்த போது தொழிலாளர் உரிமைகளைப் பறிமுதல் செய்த யு. என். பி. யினர் இப்போது தொழிலாளர் நலனில் ஏன் ஈடுபாடு காட்ட வேண்டும்? இது ஒரு அரசியல் தந்திரமல்லவா?"

கடந்த 15 மாத காலமாக எஸ், எல். எப். பி. அரசாங்கம் அபிவிருத்தித் திட்டவேலைகளை ஆரம்பிக்கும் என மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்தார்கள். ஆனால் இன்று கூட நாட்டின் பெரும் பிரச்சினைகளுக்கு எஸ. எல். எப். பி. பரிகாரம் தேடவில்லை. வீடமைப்பு வேலையில்லாப் பிரச்சினை, சுகாதாரம் கல்வி ஆகியவற்றில் மக்களின் உள்ளம் பெரிதும் குழப்பமடைந்திருக்கிறது."

கருவாட்டு விநியோகம்பற்றி டாக்டர் என். எம். குறிப்பிட்டதாவது:

"எமது கட்சி ஆட்சிக்கு வந்தால் ருத்தல் 70 சத விலைக்கு கருவாடு விற்பனை செய்வோம் எனச் சென்ற தேர்தல் காலத்தில் நான் கூறினேன். ஆனல் இன்று நாட்டில் கருவாட்டுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. கருவாடு விநியோகத்தை இன்று கூ. மொ. வி. தாபனம் ஏற்றுள்ளது. என்றாலும் கருவாட்டு உரிமை கள்ள வியாபாரிகள் கையிலேயே இருந்து வருகிறது.

"கடந்த 25 வருடகாலமாக எமது கட்சி சிங்களத்தை அரசகரும மொழியாக்குவதற்குப் போராடி வந்தது, யு. என். பி, இதைவிட்டு ஆங்கிலத்தை அரசகரும மொழியாக்கியது. இன்று அரசகரும மொழிக் கொள்கை சரியாக அமுல் செய்யப்படவில்லை. இன்றைய அரசாங்கத்தில் ஒரு சில மந்திரிகளும் உப மந்திரிகளும் தலை வீக்கம் அடைந்துள்ளார்கள். அவர்கள் தாம் விரும்பியவாறு நடந்து வருகிறார்கள். யு. என். பி. செய்து வரும் பொய்ப் பிரசாரங்களால் ஏமாறாது இருக்குமாறு நான் மக்களை கேட்டுக் கொள்கிறேன்".

---

## 17 சதம் கூட்டியதற்கு அபராதம் ரூ. 750

ன்னைவை, செவ்வாய்

கால் ருத்தல் சீரகத்தை கட்டுப்பாட்டு விலையிலும் 17 சதம் அதிகமாக விற்றதற்காக பேராதனையிலுள்ள பலசரக்குக் கடைக்காரரான யு. டபிள்யு. டேவிட் என்பவருக்கு ரூ. 750 அபராதம் விதிக்கப்பட்டது.

எம். எஸ் அப்துல்காதரும், எம். எட்மண்ட் பெரேராவும் கட்டுப்பாட்டு விலைக்கு அதிகமாக சீரகம் விற்றதற்காக தலைக்கு 50 ரூபா அபராதம் செலுத்தும்படி உத்தரவிடப் பட்டனர்.

---

## இலங்கரத்ன பென்ஷன்

கொழும்பு, செவ்வாய்

திரு. இலங்கரத்னவுக்கு பென்ஷன் வழங்கவேண்டுமென்றுகோரும் ஒருதீர்மானத்தை அனேக எதிர்க் கட்சி அங்கத்தினர்கள் பார்லிமெண்டில்ஆட்சேபிப்பார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

---

## தொழில் மந்திரியின் பார்லிமெண்டரி காரியதரிசி

கொழும்பு, செவ்வாய்

யட்டிநுவர எம். பி. திரு. வீரசேகரா தொழில் மந்திரியின் பார்லிமெண்ரிக் காரியதரிசியாக நியமிக்கப்பட்டிருக்கிறார். வியாழக்கிழமை அவர் சத்தியப் பிரமாணம் செய்து கொள்வார்.

---

# "தேசிய கல்வி முறையில் பௌத்த கல்விக்கு இடமிராது"

## திரு. ராஜரத்ன பேச்சு

கொழும்பு, செவ்வாய்

"ஒரு சில பொம்மை ஹிட்லர்கள் கூடி ஜனநாயகத்தை அழித்துவிடுவதையும், அதற்குப் பதில் தனியாதிக்கமுடைய அரசாங்கத்தை நிறுவுவதையும் பொதுமக்கள் பார்த்துக் கொண்டிருக்க மாட்டார்கள்."

இவ்வாறு புறக்கோட்டையில் அளிக்கப்பட்ட விருந்து பசாரமொன்றில் பேசுகையில் திரு. கே. எம். பி. ராஜரத்ன கூறினார். கூட்டத்துக்கு கேதலகம ஜின்னரத்ன தேரோ தலைமைவகித்தார்.

திரு. ராஜரத்ன மேலும் பேசுகையில், வெளிமடை இடைத் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டதில் இருந்து தற்போதைய அரசாங்கத்தின் ஜனநாயகத் தன்மையை அறிந்து கொள்ளலாம் என்றார். வெளிமடை இடைத் தேர்தலில், வேண்டுமானல் பிரதமரும் கலந்துகொள்ளட்டும் எனத் திரும்பவும் ஒருமுறை திரு. ராஜரத்ன சவால் விடுத்துள்ளார்.

தேசிய கல்விமுறை பற்றிக் குறிப்பிடுகையில், "தேசிய கல்விமுறையினல் பௌத்த கல்வி ஒரேயடியாகக் கைவிடப் பட்டுவிடும்" என்று திரு ராஜரத்ன கூறினர்.

---

## பனையால் விழுந்து மாண்டார்

யாழ்ப்பாணம், செவ்வாய்

சுழிபுரத்தைச் சேர்ந்த சின்னவன் ஆழ்வான் (வயது 55) பனைமரதால் விழுந்ததனால் முறிவுகளுடன் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் ஆபத்தான நிலையில் அனுமதிக்கப்பட்ட சிறிது நேரத்துள் மரணமானர்.

கோயில் பொங்கலுக்கு மட்டைபிரித்தெடுக்க பனைமரத்தில் ஏறியதாகவும், தவறிக் கீழே விழுந்ததாகவும் தெரிகிறது.

திடீர்மரண விசாரணை அதிகாரி விபத்தினல் ஏற்பட்ட மரணமெனத் தீர்ப்பளித்தார்.

---

## 1500 மாணவர் ஆரம்பிக்கும் தேசிய சேவைத் திட்டம்

கொழும்பு, செவ்வாய்

தெஹிவளை, வனத்தமுல்லை இவ்விரு இடங்களிலுள்ள இரு பள்ளிக்கூடங்களைச் சேர்ந்த 1500 மாணவர்கள், வருகிற டிசம்பர் மாதம் 2-ந் திகதி தேசிய சேவைத் திட்டத்தை ஆரம்பித்துவைப்பர்.

தெஹிவளை மகாவித்தியாலயத்தில், ஒரு புதிய விளையாட்டுத் திடலை அமைப்பதுடன் வனத்தமுல்லையில் சுத்தப்படுத்தும் இயக்கமொன்றையும் அவர்கள் ஆரம்பிப்பர்.

---

# "தவறுதல்களை திருத்த வேண்டும்", கவிழ்க்க முயலக்கூடாது"

—எம். ஜி. மெண்டிஸ்

இரத்தினபுரி, செவ்வாய்

"சோஷலிஸ ரஷ்யாவின் தீவிர முன்னேற்றம் எனது மனதை அதிகம் கவர்ந்துள்ளது இலங்கையும் அவ்வாறு முன்னேற வேண்டுமென நான் விரும்புகிறேன் துரதிர்ஷ்டவசமாக அரசாங்கத்துக்குள்ளேயே ஒரு சில பிற்போக்குவாதிகள் இருக்கிறார்கள் எனவே நாமும் மந்தகதியில் தான் செல்லவேண்டும்".

இவ்வாறு திரு பீலிக்ஸ டயஸ அண்மையில் தமக்குக் கூறியதாக லங்கா மோட்டார் தொழிலாளர் சங்கத் தலைவர் திரு எம் ஜி மெண்டிஸ, இ போ ச தொழிலாளர் கூட்டமொன்றில் பேசுகையில் கூறினார் திரு மெண்டிஸ மேலும் கூறியதாவது:

அரசாங்கத்துக்கு கம்யூனிஸ்ட் கட்சி பந்தம் பிடிப்பதாகக் கம்யூனிஸ்ட் கட்சி மீது குறை கூறப்படுகிறது 1956ம் ஆண்டு சுதந்திரக் கட்சியின் வெற்றியின் விளைவாகவே முன்னேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன என்பதை கம்யூனிஸ்ட் கட்சி எதுவித ஆட்சேபனையுமின்றி ஏற்றுக்கொள்கிறது இன்றைய அரசாங்கத்தில் தவறுகள் இருக்கின்றன அவற்றைத் திருத்த வேண்டுமேயொழிய அரசாங்கத்தைக் கவிழ்க்க முயலக் கூடாது.

"பிலிப்பும், என் எம்மும் ஒன்று சேர்ந்தார்களானல் இடதுசாரி அரசாங்கமொன்று உருவாகலாம் ஆனல் பிலிப்பும், என் எம்மும் தலைவர்களாக மட்டும் இருக்கவே விரும்புகிறார்கள் இடதுசாரி அரசாங்கம் அமைப்பதில் அவர்களுக்கு அக்கறையில்லை இந்த சமயத்தில் எஸ எல் எப் பியை நாம் முறியடிப்போமானல் யு என் பி மீண்டும் ஆட்சிக்கு வரும் இதை நாம் ஒரு போதும் வரவேக்க முடியாது எனவே தான் நாம் அரசாங்கத்தை ஆதரிக்கிறோம்".

---

## காயமடைந்தவரின் வாக்குமூல நகல்

யாழ்ப்பாணம், செவ்வாய்

காயமடைந்த ஒருவரின் வாக்குமூல அறிக்கையை, கோர்ட்டின் நேரத்தை வீணாக்காமல்உடனடியாக வெளியிடும்படி மாஜிஸ்ரேட் அரசு வாலடன் யாழ்ப்பாணம் பொலிஸ் சுப்பிரீண்டனுக்கு உத்தரவிட்டார்.

இவ வழக்கில் தம்பிராஜா, நவரத்தினம் ஆகிய இருவரும் கொலை முயற்சி செய்ததாய் ஆனைக்கோட்டைப் பொலிசைச் சேர்ந்த சப் இன்ஸ்பெக்டர் டி. கந்தையா குற்றஞ் சாட்டியிருந்தார்.

எதிரியின் சார்பாகஆஜரான திரு. சாம். ஏ. சபாபதி, திரு. ஆர். விசுவநாதன் ஆகியோர் காயமடைந்தவரின் வாக்குமூல நகல் பொலிசாரிடமிருந்து கோரப்பட வேண்டுமெனக் கோரினர்.

திருத்தப்பட்ட சட்டப் படி காயமடைந்தவரின் வாக்குமூல நகலை உடனடியாகச் சமர்ப்பிக்குமாறு மாஜிஸரேட் உத்தரவிட்டு, வழக்கை மாலைவரை ஒத்திவைத்தார்.

---

# கிராமப்புற பள்ளிகளில் வர்த்தக வகுப்புக்கள்

## கல்வி மந்திரிக்கு கோப்பாய் எம். பி. மகஜர்

கொழும்பு, செவ்வாய்

**யாழ்ப்பாணப் பகுதியிலுள்ள சில கிராமப்புறங்களில் இருக்கும் பெரிய பாடசாலைகளில் வர்த்தக வகுப்புகளை நடத்த ஏற்பாடு செய்யுமாறு அகில இலங்கை வர்த்தகக் கல்விச் சங்கத்தின் சார்பாக கோப்பாய் எம். பி. திரு. எம். பாலசுந்தரம் கல்வி மந்திரிக்கு அனுப்பியுள்ள மகஜரில் கேட்டுக்கொண்டிருக்கிறார்.**

"யாழ்ப்பாண தீபகற்பத்திலுள்ள 50 செகண்டரி பாடசாலைகளில் 7 மட்டுமே தகுதி பெற்ற ஆசிரியர்களைக்கொண்டு வர்த்தக வகுப்புக்களை நடத்துகின்றன. கொக்குவில் இந்துக் கல்லூரி, மானிப்பாய் கல்லூரி ஆகியவற்றைத்தவிர மற்ற 5 பாடசாலைகளும் யாழ்ப்பாண நகரப்பகுதியிலேயே இருக்கின்றன. கிராமப்புறங்களில் ஒரு பள்ளியிலும் வர்த்தக வகுப்புக்கள் நடைபெறவில்லை. உதாரணமாக எனது தொகுதியில் ஒரு பள்ளியும் வர்த்தகபாடம் போதிக்கவில்லை. கிராமப்புற மாணவர்களுக்கு இந்த வாய்ப்பை ஒதுக்குவது நியாயமல்ல. எனது தொகுதியிலுள்ள 7 சீனியர் செகண்டரி பாடசாலைகளில் குறைந்தது நான்கிலாவது இந்த வகுப்புக்கள் தகுதி வாய்ந்த ஆசிரியர்களைக்கொண்டு சீக்கிரம் ஆரம்பிக்கப்படும் என நம்புகிறேன்" என்றும் மகஜரில் அவர் கூறியிருக்கிறார்.

---

# தேவைப்படாத பாடசாலைகளை மூடிவிட யோசனை

## கல்வி அமைச்சரின் புதிய கல்வித் திட்டம்

கொழும்பு, செவ்வாய்

எல்லாப்பள்ளிக்கூடங்களிலுமுள்ள ஆசிரியர்கள், புத்தகசாலைகள் விஞ்ஞான ஆய்வுக்கூடம் முதலிய வசதிகளை மேலான முறையில் பயன்படுத்தக்கூடியவாறு, பல பள்ளிக் கூட வகுப்புகளையும் இணைத்து திருத்தி அமைக்கும் ஒரு திட்டத்தை, கல்வி அமைச்சர், பார்லிமெண்ட் மெம்பர்களிடம் சமர்ப்பித்திருக்கிறார்.

அண்டையிலுள்ள பள்ளிக்கூடங்களிலுள்ள சில வகுப்புகளை இணைக்கவும், பல ஆரம்ப வகுப்புகளை இணைத்து ஆரம்பப் பள்ளிக்கூடங்களாக அமைக்கவும், கல்வி காரணங்களுக்குத் தேவைப்படாத பள்ளிக்கூடங்களை மூடவும் இத்திட்டத்தில் யோசனை கூறப்பட்டிருக்கிறது.

நகரங்களிலோ, கிராமங்களிலோ அல்லது எந்த குறிப்பிட்ட தேர்தல் தொகுதியிலோ பள்ளிக்கூடங்களைத் திருத்தி அமைப்பது பற்றிய யோசனைகளைத் தெரிவிக்குமாறு, கல்வி அமைச்சர், பார்லிமெண்ட் மெமபர்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

**மணி வாக்கு**

'முன்னாள் நடந்தவற்றை அறியாதிருந்தால் நாம் எந்நாளும் குழந்தைகளே'

ஈழநாடு
EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு கார்த்திகை மீ 1உ (16-11-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone: 389.

## கல்வியில் வேற்றுமை

கண்டியிலே கல்வி அமைச்சர் பேசுகையில், சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்த தமக்கு அதிகம் பொறுப்புவாய்ந்த கல்வி மந்திரி பதவி முதல் முதலாக அளிக்கப்பெற்றுள்ளதாயும், நீதியான முறையிலேயே தாம் திட்டமிட்டு வருவதாயும், எல்லாரையும் சமமாக மதித்து எல்லோருக்கும் திருப்தியளிக்கும் வகையிலே கடமையாற்றி வருவதாயும் சொன்னார். சாதி, மத வேறுபாடின்றி எல்லாப் பிள்ளைகளுக்கும் கல்வி பொதுவானதென்பதைத் தாம் கல்வி இலாகா அதிகாரிகளுக்குஎடுத்துக் கூறியதாகவும் தெரிவித்தார்.

ஆனால் அகில இலங்கை அருந்ததியர் சங்கத்தார், கல்வி அதிபருக்கு அனுப்பியுள்ள மகஜரில், பிரஜாவுரிமை காரணமாக இங்கு பிள்ளைகளில் ஒரு பகுதியினருக்கு கல்வி வசதி மறுக்கப்படுவதாகக் கூறுகின்றனர். இலங்கைப் பிரஜைகள் அல்லாதாருக்கு, பாடசாலைகளில் காலியான இடங்கள் இருந்தாலே இடமளிக்க வேண்டுமென்று கல்வி அதிபர் அனுப்பியுள்ள சுற்று நிருபம் மனித தர்மத்துக்கு மாறுகுமென்றும் அதை உடனடியாக வாபஸ்பெற வேண்டுமென்றும் கேட்டிருக்கிறார்கள். எல்லோரையும் சமமாக மதித்து, எல்லாருக்கும் திருப்தியளிக்கும் வகையிலேயே கடமையாற்றி வருவதாகக் கல்வி அமைச்சர் கூறுவது உண்மையாயின் இவ் விஷயத்தைக் கவனித்து மேற்குறித்த உத்தரவை வாபஸ் பெற வேண்டும்.

இலங்கையிலே இலவசக் கல்விக்காக கோடிக்கணக்கான பணம் செலவிடப்படுவதாயும், ஆகவே இந்த வசதி இலங்கைப் பிரஜைகளுக்கே முதலாவதாகக் கிடைக்க வேண்டுமென்று வாதிக்கலாம். ஆனால் இதுவரை இலங்கையில் வசித்து வரும் எல்லாக் குழந்தைகளுக்கும் வேற்றுமையின்றி கல்வி வசதி அளித்திருக்கையில், திடீரென எக்காரணம் பற்றியும் அந்த வசதியை மறுப்பது நியாயமாகாது. மேலும் கல்வி வசதி எல்லாக் குழந்தைகளுக்கும் கிடைக்கவேண்டியது மனித அடிப்படை உரிமையுமாகும்.

இலங்கையில் வசிக்கும் எல்லாரும் பிரஜைகளாயினும் அல்லாவிடினும், நேர்முக, மறைமுக வரிகளைச் செலுத்துகின்றார்கள். இதில் வேற்றுமை எதுவுமில்லை. இலங்கையரல்லாதவர்களுக்கு சில வரிகள் அதிகம் விதிக்கப்படுகின்றன. வரிகளைச் செலுத்தும் அவர்களது குழந்தைகளுக்கு, கல்வி வசதிகளை சரிசமமாக அளிக்க, அரசாங்கம் சட்டப்படி கடமைப்பட்டிருக்கிறது. வரிகளை ஒரு பக்கம் வசூலித்துக் கொண்டு மறுபக்கம், கல்வி போன்ற அடிப்படை வசதிகளை மறுப்பது சட்டவிரோதமுமாகும்.

மலைநாட்டிலே லட்சக் கணக்கானவர்களுக்கு பிரஜாவுரிமை மறுக்கப்பட்டு, அவர்கள் நாடற்றவர்களாக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கானதோட்ட பள்ளிக்கூடங்களை அரசாங்கம் பொறுப்பேற்க முன்வராதது டன், அக்குழந்தைகள், மற்றவர்களைப் போல தங்கள் தாய்மொழி மூலம் கல்வி கற்று வரும் உரிமையையும் இழக்கக் கூடியவகையில், தேசியக் கல்விக் கமிஷன் சிபார்சு செய்திருப்பதாகக் கூறப்படுகின்றது. இந்நாட்டிலே ஒருவர் எங்கு வசித்தாலும்சரி அவ இலங்கையர், அல்லாதார், நாடற்றவர் யாராயினும் சரி அவரது குழந்தைகளுக்கும் வேற்றுமையின்றி கல்வி வசதியை சரிசமமாகக் கிடைக்க செய்வதே இலங்கை அரசாங்கத்தின் மனிதாபிமானக் கடமையாகும். இதற்கு மாறான உத்தரவை, அரசாங்கம்வாபஸ் பெறுவதுடன், எல்லாக் குழந்தைகளுக்கும் சமமான கல்வி வசதிகள் கிடைக்கவும் ஆவன செய்ய வேண்டும். இன்றேல் நாட்டில் அதிருப்தியும் மனக்கசப்பும் வளரவும், இதனால் அமைதி குன்றி நாட்டு முன்னேற்றம் தடைபடவும் இடமேற்படும்.

# சந்திரமண்டலப் பயணம்

## கிரகங்கள் உருவானதுபற்றிய கருத்துக்கள்

—பிரிட்ஸ் வாக்ல் —

இன்னும் சில காலத்துக்குள் சந்திர மண்டலத்தில் மனிதன் இறங்கி விடுவான். எந்த தேசத்தைச் சேர்ந்தவன் இறங்கப் போகிறான் என்பதைச் சொல்வதற்கில்லை. விஞ்ஞானம் என்பது கௌரவம், பிரசாரம் இவைகளுக்கு அப்பாற்பட்டதாகும். சந்திர மண்டலத்தை அடைய வெற்றி பெறுவதின் மூலம் இன்னும் புதுப்புது விஷயங்கள் பற்றி அறிய வாய்ப்பு கிடைக்கலாம்.

சந்திர மண்டலத்தை அடைவதில் மனிதன் வெற்றி பெற்றுவிட்டால் வான வெளி விஞ்ஞானம், இயற்கை சாஸ்திரம் இவை பற்றிய புதுப்புது விஷயங்கள் பற்றி அறிய வாய்ப்பு கிடைக்கும் என்பதை ஜெர்மன் வான சாஸ்திர நிபுணர் டாக்டர் ருடால்ப்குஹ்ன் டெலிவிஷன் பிரசங்கம் ஒன்றில் விவரித்தார்.

இவர் ஆல்ப்ஸ் மலையில் வெண்டல்ஸ்டீன் குன்றின் மீது அமைக்கப்பட்டுள்ள வான ஆராய்ச்சி நிலையத்தில் சேவை செய்து வருகிறார். இவர் இத்துறையில் ஆராய்ந்து பிரசுரித்து வெளியிட்டுள்ள புத்தகங்களைப் படித்தவர்கள் வான வெளி ஆராய்ச்சி சம்பந்தமாக மேலும் விஷயங்களை அறிய ஆவலுள்ளவர்களாக இருந்து வருகின்றனர். வான வெளித் துறையில் இன்னும் மர்மமாகவே இருந்து வரும் பல விஷயங்கள் பற்றி இந்த ஆராய்ச்சிகள் மூலம் புது தகவல்கள் கிடைக்கலாம் என்று இவர் எதிர் பார்க்கிறார்.

சந்திரன் ஏற்பட்டு சுமார் 400 கோடி வருஷங்கள் ஆகின்றன என்று விஞ்ஞானம் மதிப்பிடுகிறது. இதில் தண்ணீரோ, எரிமலையோ, காற்றோ இல்லாத காரணத்தினால் இந்த கிரகம் மாறுதல் இல்லாமல் இருந்து வருகிறது. சூரியனை வட்டமிட்டு வரும் இதர கிரகங்களில் உயிரினங்கள் எதுவும் இல்லை என்று சொல்லி விட முடியாது.

### இருகருத்துக்கள்

சந்திர மண்டலத்தின் மேல் பாகத்தில் உள்ள பரப்பு எப்பேர்ப்பட்டது என்பது தெரிந்தால் அதைக்கொண்டு பூமியும் இதர கிரகங்களும் எப்படி ஏற்பட்டன என்பது பற்றிய உண்மை தெரிய வரலாம். கிரகங்கள் உருவானது பற்றி இப்போது இருவிதக் கருத்துகள் நிலவி வருகின்றன. சூரியனைச் சுற்றிவரும் கிரகங்கள், உலகத்தைப் பற்றிய துகள்கள், சில வாயுக்களின் சேர்க்கைகள் இவைகளின் சேர்க்கையால் ஏற்பட்டன என்பது ஒரு கருத்து. மற்றொன்று சூரியனிடமிருந்து தனித்துப் பிரிந்த தீக்கோளங்கள் ஆகர்ஷண சக்தியால் இழுக்கப்பட்டு ஒரு நிலையில் தங்கி உஷ்ணம் ஆறிவிட்டதால் இறுகிப் போய் உருவானது என்பதாகும்.

### இடைவெளி நிலையம்

சந்திர மண்டலத்திலுள்ள சூழ்நிலை இதர கிரகங்களைப் பற்றி அறிய "இருந்து பார்க்கும்" ஓர் இடமாக உதவக் கூடியதாக உள்ளது. பூமியிலிருந்து இக்கிரகங்களைப் பற்றி சரிவர அறிய முடியாமலிருப்பதற்குக் காரணம் அக்கிரகங்களிலிருந்து வரும் கிரணங்கள் ஒலி அலைகள் முதலியனவற்றை பூமியின் சீதோஷ்ண நிலை தடுத்துவிடுகிறது. ஆனால் இவைகளைச் சந்திர மண்டலத்திலிருந்து மிக ஸ்பஷ்டமாகக் கவனிக்கலாம். வான வெளிப் பயண ராக்கெட்டுகளுக்கும் எரிபொருள் விநியோகம் செய்யும் இடைவெளி நிலையமாக சந்திரன் உதவலாம். செவ்வாய் கிரகம் சுக்கிரன் கிரகங்களுக்குச் செல்லும் ராக்கெட்டுகள் சந்திரனைத் தாண்டியே செல்ல வேண்டும்.

ரஷ்ய வான வெளி வீரர் டிட்டாவின் முயற்சியைத் தொடர்ந்து மேலும் பல முயற்சிகள் சந்திர மண்டலத்தை அடையச் செய்யப்படலாம். மனிதன் சந்திர மண்டலத்தை அடைவது வெகு தூரத்திலில்லை. சந்திரனை அடைவது வெகு சீக்கிரத்திலேயே நடைபெறும் காரியம் என்று ஜெர்மன் வான ஆராய்ச்சி நிபுணர் டாக்டர் குஹ்ன் கருதுகிறார். எந்த நாட்டைச் சேர்ந்தவர் முதலில் சந்திர மண்டலத்தில் காலடி எடுத்து வைப்பார் என்று சொல்வதற்கில்லை.

<u>ஆசிரியருக்குக் கடிதம்</u>

## கம்பளை பட்டின பாடசாலைகள் புனரமைப்பு

கம்பளை நகரத்திலுள்ள பாடசாலைகளை ஒன்று சேர்க்க கல்வி இலாகாவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். இது தேசிய கல்வித் திட்டத்தின் முதலாவது நடவடிக்கையாக இருக்கலாம்.

இத்திட்டத்தினால் இங்குள்ள பாடசாலைகள் தமது தனித்துவத்தை இழக்க நேரிடும். இன்னும் இவ்விதம் இருக்கும் பாடசாலைகளைச் சேர்த்து ஓரிரு பெரிய கல்லூரிகளாக்குவதால கல்வி நிலையங்களின் எண்ணிக்கை குறைந்து விடும்.

ஏற்கெனவே மாணவர்களின் தொகை அதிகரித்துள்ள சாகிராக் கல்லூரியில் சென் ஜோசப் கல்லூரி, சென் ஜோசப் கான்வென்ட், குருமானியா முஸ்லிம் கல்லூரி ஆகிய கல்லூரிகளிலிருந்து மாணவர்கள் சேர்க்கப்படுவதால் அக் கல்லூரியின் மாணவர் தொகை மேலும் அதிகரிக்க வழிசெய்வதாகவே இருக்கும்.

இவ்வித புனரமைப்புத் திட்டத்தினால் இதுகாலும் நல்ல சேவை செய்து வந்த பாடசாலைகள் தமது சேவையைத் தொடர்ந்து செய்யாது மறந்து போகும். ஆயிரம் இரண்டாயிரம் மாணவர்கள் பயிலும் பெரிய கல்லூரிகளுக்கு இவை தம்மை அர்ப்பணம் செய்ய வேண்டியதுதான்.

இவ்விதம் ஒரு கல்லூரியில் இத்தனை மாணவர்களையும் நெருக்கமாக வைத்துப் பயிற்சி அளிக்க வேண்டுமா என ஒருவர் கருதுவது நியாயமானதே. இவ்வாறு மாணவர்களை நெருக்கிப் புதிய திட்டத்தைப் பரீட்சிக்கக் கூடாது. சிக்கன நடவடிக்கை காரணமாக இவ்வாறு செய்தாலும் இதற்கான முன்னேற்பாடான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதா என்பது பற்றி நாம் சிந்திக்கவேண்டும். இந்த ஓரிரு கல்லூரிகளில் பயிற்சி பெறப் போகும் மாணவர்களுக்குப் போதிய வகுப்பறைகள், ஆய்வு கூடங்கள், சுகாதார வசதிகள் இருக்கின்றனவா? இவ்வித வசதிகளில்லாமல் பாடசாலைகளைச் சேர்த்து பெரிய கல்லூரிகளாக்குவது ஒரு மரத்தின் பெரிய கிளையை இன்னொரு வளர்ந்த மரத்துடன் ஒட்டுவது போல் இருக்கும்.

பொதுமக்களின் அபிப்பிராயத்தைப் பெறாது மாணவர்களையும், ஆசிரியர்களையும், தலைமை ஆசிரியர்களையும் இவ்வித கஷ்டத்துக்குள்ளாக்குவது கொடுமையானதொன்றாக இருக்கும்.

பாடசாலைகளைச் சேர்ப்பதால் மாணவிகளும் மாணவர்களும் ஒன்று சேர்ந்து பயில வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. முஸ்லிம்களைப் பொறுத்தவரை இந்த முறையை அவர்கள் எதிர்க்கவே செய்கின்றனர். ஒரு சமுகத்தினர் விரும்பாத கூட்டுக்கல்வியைக் கட்டாயப்படுத்துவது ஜனநாயக தர்மத்துக்கு ஏற்றதா?

சென்றவருடம்தான் ஆரம்ப வகுப்புகளில் போதனைமொழியாக இருந்த ஆங்கிலமொழி நீக்கப்பட்டது. சிலர் பாடசாலையிலிருந்து வெளியேறும்படி வற்புறுத்தப்பட்டனர். சிலர் அவர்களின் விருப்பத்துக்கு மாறாக சிங்களமொழி மூலம் பயில்வேண்டியிருந்தது.

ஆரம்ப வகுப்புகளில் போதனைமொழியாக இருந்த தமிழ் மொழி நீக்கப்பட்டது. முஸ்லிம்கள் ஆங்கிலமொழியிலும் தமிழ் மொழியிலும் கல்வி பயில அனுமதிக்கப்படுவார்களா? என்பது பற்றி கல்வி டைரக்டர் விளக்குமாறு கோருகிறேன்.

சுமார் 700000 பிள்ளைகள் பாடசாலைகளில் வசதிக்குறைவு ஏற்பட்டுள்ளதால் பள்ளிக்கூடம் செல்லும் வயது வந்தும் பள்ளிக்கூடம் செல்ல முடியாதிருப்பதாக அரசாங்கம் தெரிவிக்கிறது. எனவே, ஆரம்ப பாடசாலைகள் கட்டுவது சோஷலிச அரசாங்கத்தின் முதற்கடமையல்லவா? இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்காது புனரமைப்பு செய்ய எண்ணுவது தவறாக இருக்கும்.

புனரமைப்புச் செய்வதற்கு முன்னர் நன்றாக ஆராய்ந்து முதற்செய்யவேண்டிய காரியத்தை முதலிலும் பின்னர்செய்யவேண்டியதை அதற்குப்பின்னரும் செய்ய அரசாங்கம் முயலவேண்டும்.

டி. வி. எம். நூன்,
(நகரசபை அங்கத்தவர்)
கம்பளை.

## பொலிஸ்காரரை தாக்கியதாக வழக்கு

### எதிரிக்கு நான்குமாத சிறை

பருத்தித்துறை, செவ்வாய்

பருத்தித்துறைப் பொலிசைச் சேர்ந்த பொலிஸ் கான்ஸ்டபிள் முதியன் சலாகே முத்து பண்டா என்பவரை இவ்வருடம் பெப்ரவரி மாதம் 16-ந் திகதி அடித்ததாக கரவெட்டியைச் சேர்ந்த சின்னத்தம்பி மார்க்கண்டு, ஐயம்பிள்ளை காங்கேசு ஆகிய இருவர் மீதும் தொடரப்பட்ட வழக்கில் நீதிபதி திரு. ஏ. வைத்தியலிங்கம் இரு எதிரிகட்கும் தலா நான்கு மாதச் சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

## ஐயாறன் எழுதுவது

அன்னவிசாரம் அதுவே விசாரம் அது ஒழிந்தால் சொர்ண விசாரம் தொலையா விசாரம் என்று பாடினார் பட்டினத்தடிகள். ஆனால் இக்காலத்தில் பலருக்கும் சிறப்பாக அமெரிக்கருக்கும் புதிய விசாரமொன்று ஏற்பட்டிருக்கிறது அதுதான் யுத்த விசாரம்.

இங்கு நம்மிடையே சிலருக்கு யுத்தம் வந்தால் நல்லதென்றும் நினைக்கலாம். கொள்ளை லாபமடித்து லட்சப் பிரபுவாக புதிய 'சான்ஸ்' கிடைக்குமென்றும் ஆவலுடனிருக்கலாம். ஆனால் அமெரிக்கா, ஐரோப்பா முதலிய மேலை நாடுகளிலே அடுத்த அணுயுத்தம்வந்தால் எல்லாம் சர்வநாசமடைந்து விடுமென்றே அஞ்சி வாழுகின்றார்கள். நியுயோர்க் முதலிய நகரங்களிலே பூமிக்கடியில் அணு பாதுகாப்பு நிலையங்களை பெரும் பணச் செலவில் பலரும் முன்னேற்பாடாகக் கட்டியிருக்கிறார்கள்.

* * *

இந்தியப் பிரதமர் நேருஜி ஐக்கிய நாடுகள் சபையில் பேசுகையில் எலிகளைப்போல் பூமியிலே குழி தோண்டிக் கொண்டு வசிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதற்கு வருந்தினார். இன்றைய அணுகுண்டு நவநாகரிகம், எலிகளைப்போல பூமிக்கடியில் குழி தோண்டி வசிக்கும் நிலைக்குக் கொண்டு விட்டிருக்கிறது!

"இந்த ஆண்டுக்குள்ளாக யுத்தம் வருமா?" என்று அமெரிக்க பத்திரிகை நிருபர்கள் கேட்டதற்கு, நேருஜி "உலகனைத்தும் நிலைமை மோசமாகவே இருப்பினும் யுத்தம் அநேகமாக வராதென்றே தோன்றுகிறது" என்றும், பெர்லின் நெருக்கடி குறைந்து வருகிறதென்றும் சொன்னார்.

நேருஜியின் இந்தப் பதில் யுத்தபீதி கொண்டுள்ள மேலை நாட்டினருக்குப் பெரிதும் ஆறுதலளிக்கும்.

உலக நெருக்கடிக்கு என்ன காரணம்? என்று கேட்டதற்கு "மனிதனின் தவறும், புத்திக் குறைவுமே" என்று நேருஜி பதிலளித்தும், பத்திரிகை நிருபர்கள் அனைவரும் சிரித்துவிட்டனராம்!

எந்த வல்லரசின் மீதும் அவர் குற்றம் சுமத்துவாரென்று நிருபர்கள் எதிர்பார்த்தனரோ என்னவோ! பத்திரிகை நிருபர்களின் பாணங்களை வெற்றிகரமாகவும் சுமுகமாகவும் நேருஜி சமாளிக்கும் ரகசியமென்ன? கள்ளங்கபடமற்ற நடுநிலைமையும் ஆதிக்க ஆசையின்றி, உலக சமாதானத்தை உண்மையில் விரும்புவதும்தானே?

* * *

லண்டனிலே சமீபத்தில் ஏற்பட்ட ஒரு வகுப்புக் கலவரத்தில் ஈடுபட்ட வெள்ளை வாலிபர்களை அங்கு நீதிபதி வன்மையாகக் கண்டித்து, ஐந்து வருட கடுங்காவல் தண்டனை விதித்தது பொதுவாக வெள்ளையரல்லாதவர்களுக்கு பிரிட்டன்மீது நம்பிக்கையைப் பலப்படுத்துவதாக இருக்கும்.

பிரிட்டனிலே நிறவேற்றுமை நிலவுவதாக சில மாணவர்கள் புகார் கூறுவதுண்டு. சிற்சிலருக்கு இவ்வேற்றுமை மனப்பான்மை இருக்கக் கூடும். இங்கு நம்மிடையே சாதி வேற்றுமை இன்னும் இருக்கவில்லையா? ஆனால் மேற்குறித்த தீர்ப்பு, இவ்விஷயமாக பிரிட்டனின் உள்ளத்தை வெளிப்படுத்துகின்றது.

# உயிர்ப்பிச்சை கோரும்போது லுமும்பா கொலைசெய்யப்பட்டார்

## ஷோம்பேயின் முன்னிலையில் பெல்ஜிய சிப்பாய் சுட்டாராம்

### ஐ. நா. விசாரணைக் கமிஷன் தரும் தகவல்கள்

நியுயோர்க், நவ. 15

சுதந்திர காங்கோவின் முதலாவது பிரதமர் திரு. லுமும்பா முன்னேறபாட்டின் படி திட்டமிட்டுக் கொலை செய்யப்பட்டாரென்றும் கடாங்கா அதிபர் ஷோம்பேயின் முன்னிலையிலேயே அவர் கொலை செய்யப்பட்டிருக்கலாமென்றும் லுமும்பா கொலை பற்றி விசாரணை செய்த ஐ. நா. விசாரணைக் கமிஷன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

சிறையிலிருந்து லுமும்பா தப்பியோடிய பொழுது மலைஜாதியினரால் அவர் கொலை செய்யப்பட்டார் என்ற கடாங்காவின் கூற்றை விசாரணைக் கமிஷன் நிராகரித்துவிட்டது.

லுமும்பா கொலை செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டதற்கு ஒரு மாதத்திற்கு முன்னரே அவர் கொலை செய்யப்பட்டிருக்கலாமென்று கமிஷன் தெரிவித்துள்ளது.

**மன்றுடியபொழுது சுடப்பட்டார்**

விசாரணைக் கமிஷன் மேலும் பின்வருமாறு தெரிவித்துள்ளது:

திரு. லுமும்பாவுடன் சிறைவைக்கப்பட்டிருந்த அவரது இரு சகாக்களும் முதலில் ஒரு அறைக்கு அழைத்துச் செல்லப்பட்டிருக்கினறனர். அங்கு அவர்கள் தங்கள் குலதெய்வத்தைப் பிரார்த்திக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர். அவர்கள் பிரார்த்தனை செய்து கொண்டிருக்கையில் முதுகிலும் தலையிலும் சுடப்பட்டுக் கொலை செய்யப்பட்டிருக்கின்றனர்.

இதே அறைக்கு திரு லுமும்பா பின்னர் கொண்டு செல்லப்பட்டார். தனக்குக் கருணை காட்டுமாறு திரு. லுமும்பா நிலத்தில் விழுந்து மன்றுடியபொழுது அவர் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார் என்பதற்கு தங்களுக்குசான்றுகள் கிடைத்ததாக விசாரணைக் கமிஷன் தெரிவித்துள்ளது.

இக்கொலைகள் கடாங்கா 'அதிபர்' ஷோம்பேயினதும் அவரது மந்திரிகள் பலரது முன்னிலையிலும்நடைபெற்றிருக்கலாமென்றும் இக்கொலைகளை செய்வதற்கு பெல்ஜிய ராணுவ அதிகாரி ஒருவரை கடாங்கா அரசாங்கத்தினர் அமர்த்தியிருந்தனரென்றும் கமிஷன் கூறியுள்ளது.

**கலாபுவுக்கும் இதில் பொறுப்பு**

திரு. லுமும்பாவின் கொலையில் கடாங்கா உள்விவகார மந்திரி மொனுங்கோ பெரும் பங்கு கொண்டிருந்திருக்கிறரென்றும் திரு. லுமும்பாவின் எதிரிகள் என்று தெரிந்தும் கடாங்கா அதிகாரிகளிடம் திரு. லுமும்பாவை ஒப்படைத்ததன் மூலம் காங்கோ அதிபர் கலாபுவுக்கும் இக்கொலையில் பொறுப்புள்ளதென்றும் கமிஷன் தெரிவித்துள்ளது.

இச்கொலைக் குற்றங்களிலிருந்து கடாங்காவினர் தப்பித்துக் கொள்ள முடியாதென்றும் விரைவில் நீதி விசாரணைகள் ஆரம்பமாக வேண்டுமென்றும் கமிஷன் தெரிவித்துள்ளது.

# "எல்லா நிலையிலும் இறையருள் பெற முடியும்"

## நாவலப்பிட்டி சஷ்டி விழாவில் பேச்சு

நாவலப்பிட்டி, செவ்வாய்

"திருமணம் செய்து இல்லற வாழ்க்கையை மேற்கொண்டால் இறைவழிபாடு செய்யக் கூடாதென்று கருதக் கூடாது. எல்லா நிலையிலும் வழிபாடு செய்து இறையருளைப் பெற முடியும். நாயன்மார்கள், ஆழ்வார்கள், சமய குரவர்கள் எல்லா நிலையிலும் வாழ்ந்து காட்டி இறையருளைப் பெற்றுள்ளனர்."

இவ்வாறு ஸ்ரீமதி பொன்னம்மாள் கிருஷ்ணபிள்ளை நாவலப்பிடி இந்து வாலிபர் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற கந்தசஷ்டி விழாவில் தலைமை வகித்துப் பேசுகையில் கூறினர்.

"இறைவனல் கொடுக்கப்பட்ட பகுத்தறிவை நல்ல வழியில் பயன்படுத்தத் தவறிவிட்டமையே துன்பங்களுக்குக் காரணம். எல்லாச் செயல்களும் இறைவன் சக்தியினலேயே நடைபெறுகிறதென்பதை உணரும் பக்குவத்தை அடையும்போதுதான் நமது வாழ்க்கை பயனுடையதாக அமைகின்றது" என்று திருமதி பொன்னம்மாள் கூறினர்.

கடந்த ஆறு தினங்களாக நடைபெற்ற இவ்விழாவில் இறுவில் ஸ்ரீ வை. தியாகராஜா சுவாமிகள் கோஷ்டியாரின் திருப்புகழ் பஜனையும் முக்கிய இடம் பெற்றது. திரு. அ. சபாபதிப்பிள்ளை நன்றி உரை கூறினர்.

# இந்திய தோட்டத் தொழிலாளர் வாழ்க்கை

## இலங்கையைவிட சிறப்பாக உள்ளதென்கிறர் இ. தொ. கா. பிரமுகர்

நாவலப்பிட்டி, செவ்வாய்

இலங்கைத் தோட்டத் தொழிலாளர்களைவிட இந்தியத் தோட்டத் தொழிலாளர்கள் சிறப்பான வாழ்க்கை வாழ்கிறர்களென்று இ. தொ. கா. கம்பளை மாவட்டத் தலைவர் திரு. வே. அண்ணமலை எல்பொடகாச்சமலை டிவிசன் தேர்தல் கூட்டத்தில் பேசுகையில் கூறினர். அவர் மேலும். கூறியதாவது:-

இலங்கைத் தோட்டத் தொழிலாளர்களைவிட இந்தியாவில் தேயிலைத் தோட்டத்தில் வசிக்கும், தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரம் பன்மடங்கு உயர்ந்ததாக இருக்கிறதென்பதை நான்சமீபத்தில் தென் இந்திய தேயிலைத் தோட்டங்களுக்குச் சென்று நேரில் கண்டறிந்தேன். தோட்டத் தொழிலாளர்கள் பெறும் சம்பள விகிதம் இலங்கையில் நமது தொழிலாளர்கள் பெறும் சம்பளவிகிதத்திலிருந்து அதிக வித்தியாசமில்லாமலிருந்தாலும், இந்தியாவில் வாழ்க்கைத்தரம் உயர்ந்தும், பொருள்களின் விலை குறைவானதாகவிருப்பதாலும் அவர்கள் நம் தொழிலாளர்களைவிட உயர்ந்த வாழ்க்கைத் தரத்தைப் பெற்றிருக்கிறர்கள். இவர்கள் வாழ்க்கைத்தரம் உயர்ந்திருப்பதற்கு மற்றெரு காரணம் அவர்களிடம் ஐக்கிய மனப்பான்மை பெருகியுள்ளது. நம் தோட்டத் தொழிலாளர்கள் தீபாவளி போன்ற பண்டிகைகளுக்கு தோட்ட நிர்வாகத்திடம் கடனை கேட்டு பெறுகிறர்கள். ஆனல் இந்திய தோட்டத் தொழிலாளர்கள் அவ்விதமீன்றி, அவர்களுக்குத் தீபாவளி போனஸ் வேண்டுமென்றும், அப்போனஸ் அவர்கள் பெறும் மாதாந்திர சம்பள அடிப்படையில் வருடத்தில் குறிப்பிட்ட ஒரு சில மாதங்களின் சம்பளங்களின் குறிப்பிட்டசதவிகிதம் வேண்டுமென்று கோருகிறர்கள். இக்கோரிக்கையை அவர்கள் ஒற்றுமையால் வெற்றிபெறுகிறர்கள். நான் இதை நேரில் பார்த்துவந்தேன். நமது தொழிலாளர்கள் கடனுக்குமேல் கடன்பட்டு ஆடம்பர வாழ்க்கையை நாடுவதுபோல் அவர்கள் செய்வதில்லை. அவர்கள் மிகவும் எளிய வாழ்க்கையை விரும்பி ஏற்றுக்கொண்டிருக்கிறர்கள். இந்தியா காந்திய வழியில் முன்னேற்றமடைந்து வருகிறது.

மற்றும் மாவட்டப் பொதுக் காரியதரிசி திரு. எஸ். தங்கசாமி, உபகாரியதரிசி திரு எஸ. சவரியார், திரு. ஏ. எம். எஸ. சபாபதி ஆகியோர் பேசியபின் கீழ்க்கண்டோர் நடப்பு வருட உத்தியோகஸ்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: எம். பச்சமுத்து, உபதலைவர்: பி. பொன்னையா, காரியதரிசி: எஸ. கருப்பையா உபகாரியதரிசி: ஆர். நாராயணன், கலக்டர்: ஏ. தொட்டான்

**கமிட்டி அங்கத்தினர்கள்**

ஏ. சடையன், கே. சுப்பையா, கே. ரெங்கநாதன், ஆர். காத்தான். எம். ஃதிரேசன், எல். பெருமாள், எஸ. மாரிமுத்து, பி. சிக்கான், கே. கொண்டையன், எம். முருகன், ஏ. கந்தசாமி.

——

# சர்வகலாசாலை போதனமொழி

## மைசூர் கவர்னர் யோசனை

பங்களூர், நவ. 15

"சர்வகாலசாலைகளில் இன்னும் 25 வருடங்களுக்கு ஆங்கிலமே போதன மொழியாக இருக்க வேண்டும்" என்று மைசூர் ராஜ்ய கவர்னர் திரு. ஜெயசாமராஜ உடையார் ஒரு வைபவத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

இந்த 25 வருட இடைக்காலத்திலும் பாரத மொழிகளில் பாடப் புத்தகங்களும் மூலப் புத்தகங்களும் வளர்ச்சியடைய வழி செய்யவேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

# தென் கொரியாவுக்கு ராணுவ உதவி

## அமெரிக்கா தொடர்ந்து அளிக்கும்

வாஷிங்டன், நவ. 15

தென்கொரிய குடியரசுக்கு பொருளாதார, ராணுவ உதவிகளை அமெரிக்கா தொடர்ந்து அளித்துவரும்.

அமெரிக்க அதிபர் திரு. கென்னடியும் தென் கொரிய அதிபர் ஜெனரல் பாக்சுக்சீயும் வாஷிங்டனில் நடத்திய பேச்சுவார்த்தைகளின் முடிவில் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் இவ்விபரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக சமாதானத்துக்காக கொரிய குடியரசும் அமெரிக்காவும் தொடர்ந்து உழைத்து வருமெனவும் அக் கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கொழும்புத் திட்ட நாடுகளுக்கு உதவி

## அடுத்த வருடமும் கனடா 5 கோடி டாலர் அளிக்கும்

கோலாலம்பூர், நவ. 15

கோலாலம்பூரில் நடைபெற்று வரும் கொழும்புத் திட்டநாடுகளின் மந்திரிகள் மகாநாட்டில் இந்தியாவின் பிரதிநிதியாக கலந்துகொள்ளும் இந்திய உதவி நிதி மந்திரி திருமதி தாரகேஸ்வரி சின்ஹா பேசுகையில் அபிவிருத்தி அடைந்த நாடுகள் அபிவிருத்தி குறைந்த நாடுகளுக்கென ஒருசத விகிதத்தை ஒதுக்கிவைத்து உதவியளிக்கலாமென யோசனை கூறினர்.

அபிவிருத்தி குறைந்த நாடுகள் சமீபகாலத்தில் முன்னேற்ற மடைந்துள்ளனவென்றுலும் அந்த நாடுகளின் ஜனத்தொகைப் பெருக்கத்துடன் ஒப்பிடுகையில் முன்னேற்றமடைந்துள்ளதாகக் கூறமுடியாதென்றும் திருமதி சின்ஹா தெரிவித்தார்.

கொழும்புத் திட்டநாடுகளின் அபிவிருத்தி உதவிக்கென கனடா அடுத்த வருடமும் ஐந்து கோடி டாலர் வழங்கும் என்று கனடா மந்திரி கூறினர்.

——

### பிரிட்டிஷ் ஹைகமிஷன் பிரதம காரியதரிசியின் யாழ்ப்பாண விஜயம்

யாழ்ப்பாணம், வியாழன்

இலங்கையிலுள்ள பிரிட்டிஷ் ஹைகமிஷனரின் பிரதம காரியதரிசியான திரு. பி. ஜே. எஸ். மூன் இம்மாதம் 16-ம் திகதி விமான மூலம் யாழ்ப்பாணம் வந்து சேருவாரெனத் தெரிகிறது.

இம்மாதம் 18-ம் திகதி வட்டுக்கோட்டையிலுள்ள யாழ்ப்பாணக் கல்லூரியில் நடைபெறவிருக்கும் பட்டதாரி மாணவர் வருடாந்த விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவே திரு. மூன் யாழ்ப்பாணத்துக்கு விஜயஞ் செய்கிறர்.

யாழ்ப்பாணத்துக்கு விஜயஞ் செய்யும் திரு. மூனுக்கு யாழ்ப்பாண மேயர் 17-ம் திகதி மாலை மாநகர சபையில் ஓர் தேநீர் விருந்துபசாரம் நடத்தவும் ஏற்பாடாகியுள்ளது.

யாழ்ப்பாண நிர்வாக இணைப்பு அதிகாரியான கேணல் ஏ. ஆர். உடுகமையையும் திரு. மூன் சந்திப்பதற்கு ஏற்பாடாகியிருப்பதாகத் தெரிகிறது.

——

### இந்தியாவுக்கு அங்கத்துவம்

நியூயோர்க், நவ. 15

ஐ. நா. பொருளாதார சமூகநல சபையில் இந்தியாவும், யூகொஸ்லேவியாவும் புதிய அங்கத்துவ நாடுகளாக சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன.

# "சிக்கன வாழ்க்கை வாழ வழிவகுக்க வேண்டும்"

## இ. தொ. கா. பிரதிநிதி புத்திமதி

நாவலப்பிட்டி, செவ்வாய்

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், கம்பளை மாவட்ட ஆதரவில் நடைபெற்ற மரியாவத்தை தோட்ட வருடாந்த தேர்தல் கூட்டத்தில் மாவட்டப் பிரதிநிதி திரு. எம். பி. வீரையா தலைமை வகித்துப் பேசும்போது பின்வருமாறு கூறினர்;-

முதலில் நாம் நமது வருமானத்தைக்கொண்டு சிக்கன வாழ்க்கையை நடத்தப் பழக வேண்டும். ஒவ்வொரு மாதமும் முடிந்தவரை நமது ஊதியத்தில் மீதப்படுத்தி சேமிப்பு வங்கியில்போட்டு நமது தள்ளாத வயதில் வசதியோடிருக்க வழிவகையை உண்டாக்க முயற்சிசெய்யவேண்டும். முக்கியமாக நாம் நமது குழந்தைகளை பள்ளிக்குத் தவருமல் அனுப்பி அவர்களைக் கல்வியில் முன்னேறும்படி ஊக்கமளிக்க வேண்டும். நம்மில் அறிஞர்களாகவும். கலைஞர்களாகவும் வரக்கூடிய இளைஞர்கள் இல்லையா? இருக்கத்தான் செய்கிறர்கள். ஆனல் அவர்களை நல்லமுறையில் படிக்கவைத்து அவர்களின் முன்னேற்றத்திற்கு வழிசெய்வது கிடையாது. இவைகளையெல்லாம் மனதிற்கொள்ளாமல் சம்பளத்தை வாங்கிக்கொண்டு முதலில் கள்ளுக்கடைக்குக் கொடுத்துவிட்டு மீதியுள்ள பணத்தை வட்டிக்கு பணம் வாங்கிய பாயிடம் கொடுத்துவிட்டு வெறுங்கையுடன் வீட்டுக்குத் திரும்புகிறேம்.

மற்றும் பலர் பேசியபின் புதுவருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்:-

தலைவர் எம். சிவராமன், காரியதரிசி ஏ. செல்லையா, உபகாரியதரிசி கே. துரைசாமி, கலக்டர் டி. செல்லையா.

கமிட்டி அங்கத்தவர்கள்: சின்னன், சுப்பிரமணியம், முத்துவீரன். சத்திவேலு, மாணிக்கம், யூ. ராக்கப்பன, சின்னத்தம்பி. ஆர். இராமையா, கே. எம். றஞ.

——

### குழிக்குள் சிசு

தெரணியகல, செவ்வாய்

எட்டியாந்தோட்டைப் பொலிஸ் பகுதியில் மலல்பொல என்னுமிடத்தைச் சேர்ந்த கே. ஏ. குணவதி என்னும் பெண் பிறந்த சிசுவை மலகூடக் குழிக்குள் வீசியதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளார்.

# பாடசாலையில் இடமின்றி தவிக்கும் மாணவர்கள்

## இருநேர வகுப்புக்களினல் பயனடைவார்கள்

கொழும்பு, செவ்வாய்

பாடசாலைப் பிரவேசத்தை கோரும் அதிக மாணவர்கள் நிறைந்த பகுதிகளில் இருநேர வகுப்புகளை நடத்துவதென கல்வி டைரக்டர் தீர்மானித்திருக்கிருர். இரு நேர வகுப்புகள்வெற்றிகரமாகச் செயல்படவில்லையென கல்வி இலாகாவின் ஒருபரிசோதனைதெளிவாக்கியபோதிலும் நெருக்கடியைச் சமாளிக்கும்பொருட்டு இந்த ஏற்பாட்டைச் செய்வதென டைரக்டர்தீர்மானித்துள்ளார்.

பாடசாலை அதிபர்கள், பிரவேசம்கோரி இடமில்லாதிருக்கும் மாணவர்களின் ஜாபிதாக்களைச்சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டிருக்கிருர்கள் இந்த ஜாபிதாக்கள் கிடைத்தவுடன் அப்பாடசாலைகளில் இருநேர வகுப்புக்கள் நடத்தப்படும்.

## மேஜர் ககாரின்

புதுடில்லி, நவ. 14

சோவியத் யூனியனின் முதலாவது வானவெளி வீரர் மேஜர் யூரி ககாரின் இம்மாத இறுதியில் இந்தியாவுக்கு விஜயம் செய்வாரென்று சோவியத் அதிகாரிகள் தெரிவித்தனர். செப்டம்பரில் அவர் விஜயம் செய்யவிருந்தாரெனினும் சுகவீனம் காரணமாக அதுரத்துச் செய்யப்பட்டது.

## சார்ள்ஸ் இளவரசரின் 13வது பிறந்ததினம்

லண்டன், நவ 14

பண்டிட் நேருவின் 72வது பிறந்த தினமான இன்றுதான் மகாராணி எலிஸபெத்தின் புதல்வர் சார்ள்ஸ இளவரசரின் 13வது பிறந்த தினமுமாகும் தனது பாடசாலையில் அவர் பிறந்ததினத்தைக் கொண்டாடினர்.

## காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாடு இல்லை

லண்டன், நவ. 14

பிரிட்டனில் குடியேற்றத்தைக் கட்டுப்படுத்துவதற்கு முன், காமன்வெல்த் பிரதமர்களின் மகாநாடு நடைபெற வேண்டுமென்ற யோசனையை பிரதமர் மாக்மில்லன் நிராகரித்துவிட்டார்.

# மெக்ஸிகோவில் நேரு 4 நாள் தங்குவார்

லாஸ ஏஞ்சல்ஸ நவ.14

பிரதம மந்திரி நேரு இன்று மெக்ஸிக்கோவை அடைந்தார் 4 நாள் அவர் அங்கு தங்குவார்.

நேற்றுலாஸஏஞ்சல்ஸிலுள்ள உலக விவகார சபையில் நேரு பேசினர் அமெரிக்காவும், ரஷ்யாவும் அமைதி நிலையில் பயிற்சிபெற்றிருப்பதாயும், இரு நாடுகளும் போரை விரும்பவில்லை என்றும் அவர் அப்போது கூறினர் ரஷ்ய மக்கள் இன்னும் நல்ல வாழ்க்கை வசதிகளை அனுபவிக்க விரும்புகிருர்கள் என்றும் நேருஜீ குறிப்பிட்டார்.

லாஸ ஏஞ்சல்ஸ நகரில் நேற்று புகழ் மிக்க எழுத்தாளர்கள், கவிஞர்கள், கலைஞர்கள் ஆகியோருடன் நேருஜி விருந்துண்டார் இந்த விருந்தில் மார்லின் பிராண்டோ டெனிகே, மற்றும் பல உலகப் புகழ் பெற்ற கலைஞர்களும் இருந்தனர் காட்சிச்சாலை ஒன்றையும் அவர் சுற்றிப் பார்த்தார் அமெரிக்காவில் கென்னடி அரசாங்கத்தை இந்தியா வரவேற்பதாயும் பிரதமர் கூறினர்.

# "ஆத்திரமூட்டினல் பலாத்காரத்தை உபயோகிப்போம்"

## போர்த்துக்கலுக்கு திரு. மேனன் எச்சரிக்கை

நியுயோர்க், நவ.14

கோவா விஷயமாக ஆத்திரமூட்டப்பட்டால்இந்தியா பலாத்காரத்தைப் பிரயோகிக்கும் என இந்திய பாதுகாப்பு மந்திரி திரு. கிருஷ்ணமேனன் ஐ. நா. தர்மகர்த்தா கமிட்டியில் பேசும்போது கூறினர்.

இந்தியா எதிர்த்துத்தாக்காதுஎனக்கொள்ளவேண்டாம் எனப் போர்த்துக்கலை அவர் எச்சரித்தார். வெளிநாட்டு விஷயத்தில் இந்தியா பலாத்காரத்தை உபயோகிக்காது எனப் பிரதமர் நேரு கூறியது போர்த்துக்கலுக்குத் திருப்தியளித்திருக்கிறது என்பதை அறிவேன். ஆனல் இந்தியப் பிரதேசத்தை வசப்படுத்த முயல்வது இந்தவகையில்சேர்ந்ததல்ல. அதற்குப் பலாத்காரம் உபயோகிக்கப்படும்" என்றும் திரு. கிருஷ்ணமேனன் கூறினர்.

## சென்னை இரு பகுதிகளாகப் பிரிக்கப்படும்

சென்னை, நவ. 14

சென்னை நகரத்தை தெற்கு சென்னை, வடக்கு சென்னை என இரண்டாகப் பிரிக்கும் ஒரு மசோதாவை ஸதலஸதாபன மந்திரி ஸ்ரீமதி லூர்தம்மா சைமன் கொண்டுவந்திருக்கிருர். இருபகுதிகளுக்கும் இரண்டு முனிசிப்பல் கார்ப்பரேஷன்கள் இருக்கும்.

## ஆபிரிக்கா அணுசோதனை தடைபிரதேசம்

—ஐ. நா. அரசியல் கமிட்டி

லண்டன், நவ. 14

ஆபிரிக்காவை அணுசோதனை தடைப்பிரதேசமாக்கும் தீர்மானத்தை ஐ. நா. அரசியல் கமிட்டி நிறைவேற்றியது. இது சம்பந்தமான வாக்கெடுப்பில் 57 நாடுகள் சாதகமாய் வாக்களித்தன. தீர்மானத்துக்கு எதிராக எந்த நாடும் வாக்களிக்கவில்லை. 42 நாடுகள் வாக்கெடுப்பில் பங்கெடுக்கவில்லை. ரஷ்யா தீர்மானத்திற்குச் சாதகமாகவும், அமெரிக்காவும் பிரிட்டனும் பாதகமாகவும் வாக்களித்தன.

# வவுனியா அரசாங்க அதிபருக்கு எம். பி. பாராட்டு

வவுனியா, செவ்வாய்

"எமது முன்னேற்றமில்லாத மாவட்டத்தில் பொது மக்களுக்குத் தேவையான பல அம்சங்களை, நான் சிறைப்படுத்தப்பட்டிருந்த காலத்தில் அரசாங்க அதிபர் திரு எச் என் வனசிங்கா நிறுவியுள்ளார் பழைய ஒரு மாவட்டத்து மக்களின் பிரயோசனத்துக்கு அதிகம் உதவக்கூடிய சாதனங்களை நிறுவியுள்ள திரு எச் எஸ வனசிங்காவுக்கு எமது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவிக்க வேண்டியது எனது கடமை".

இவ்வாறு வவுனியா எம் பி திரு டி சிவசிதம்பரம் வவுனியா கோதாண்டர் நொச்சிக்குளத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் பேசுகையில் கூறினர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினல் புதிதாக நிறுவப்பட்ட பள்ளிக்கூடமொன்றை திரு எச் எஸ வனசிங்கா திறந்துவைத்தார்.

கிராம அபிவிருத்திச் சங்கத்தினல் அரசாங்க உதவியுடன் நிறுவப்பட்ட புதிய பள்ளிக்கூடத்தை வெகுவிரைவில் கல்வி இலாகாவிடம் ஒப்படைப்பதாக எம் பி வாக்களித்தார்.

## பிரிட்டனும் பொதுச்சந்தையும்

லண்டன், நவ. 14

பிரிட்டன் ஐரோப்பியப் பொதுச் சந்தையில் சேருவது சாம்ராஜ்யநாடுகளுக்கு நன்மை தரும் விஷயமாக இருக்கும் என தம் அரசாங்கம் நம்புவதாய் பிரதமர் திரு. மாக்மில்லன் கூறினர்.

## தனுஷ்கோடி—தலைமன்னர் படகுப் போக்குவரத்து

சென்னை, நவ. 14

தனுஷ்கோடிக்கும் தலைமன்னருக்குமிடையே நடைபெறும் படகுப் போக்குவரத்துக்களை கிழக்கிந்திய கப்பல் கார்ப்பரேஷன்வசம் ஒப்படைக்கத் தீர்மானித்திருப்பதாய் சட்ட சபையில் மந்திரி திரு. பக்தவத்ஸலம் அறிவித்தார். இப்போது தலைமன்னருக்கும்-தனுஷ்கோடிக்கு மிடையேயும், தூத்துக்குடிக்கும் கொழும்புக்குமிடையேயும் படகுப் போக்குவரத்தை அது ஆரம்பிக்குமென்றும் மந்திரி அப்போது கூறினர்.

## 80 வயது மூதாட்டி தற்கொலை

யாழ்ப்பாணம், செவ்வாய்

வண்ணர்பண்ணையைச் சேர்ந்த கந்தையாகைம்பெண் செல்லம்மா என்ற எண்பது வயது மூதாட்டி கிணற்றுள் வீழ்ந்து தற்கொலை செய்துகொண்டார். புற்றுநோயால் பெரிதும் அவஸ்தைப்பட்டு வந்தஇவர் வீட்டிலுள்ளவர் நித்திரை செய்யும்போது வளவுக்கிணற்றுள் வீழ்ந்துவிட்டதாகவும்காலையில் அப்பிரேதம் கிணற்றிலிருந்து எடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

திடீர்மரண விசாரணை அதிகாரி தற்கொலையெனத் தீர்ப்பளித்தார்.

## டில்லியில் பாரத தொழில் பொருட்காட்சி

### 'நேருவின் நவபாரதகனவு'

—ராதாகிருஷ்ணன்

புதுடில்லி, நவ. 14

இன்று மாலை புதுடில்லியில் பாரத தொழில் பொருட் காட்சியை உப ஜனதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் திறந்துவைத்தார். அப்போது டாக்டர் ராதாகிருஷ்ணன் பேசுகையில், "இன்று நம் பிரதமமந்திரி நேருவின் பிறந்ததினம். நாட்டுக்கும், மனிதகுலத்துக்கும் சேவைசெய்ய அவர் நீடித்து வாழவேண்டும். நேருவின் நவ பாரதக் கனவு நிறைவேறி வருகிறது என்பதற்கு இப் பொருட்காட்சி ஒரு அத்தாட்சியாக விளங்குகிறது" என்ருர். பொருட்காட்சியில் பல வெளி நாடுகளும் பங்குகொள்கின்றன.

## திறைசேரி சுற்றுநிருபங்கள் மந்திரியின் அனுமதி பெறவேண்டும்

கொழும்பு, புதன்

திறைசேரி விடுக்கும் சுற்றுநிருபங்கள் யாவும் முதலில் தனது அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று நிதி மந்திரி பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்கா உத்தரவிட்டுள்ளார்.

இந்த உத்தரவுபற்றி திறைசேரி, இலாகாக்களின் தலைவர்களுக்கு திறைசேரிக் காரியதரிசி திரு. ஷேர்லி அமரசிங்கா அறிவித்துள்ளார்.

## காயங்களுடன் இருவர் ஆஸ்பத்திரியில்

கொஸ்லாந்தை, செவ்வாய்

கொஸ்லாந்தை நாவலர் தோட்டத்தைச சேர்ந்த 28 வயது முனியாண்டியும், 65 வயதான வரதன் கங்காணியும் பலத்த காயங்களுடன் கொஸ்லாந்தை மாவட்ட ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அதே தோட்டத்தைச் சேர்ந்த புலச்சி என்பவர் இரும்புக் கம்பியால் அவர்களிருவரையும் தாக்கியதாகவும் அச்சமயம் மதுவெறியிலிருந்ததாகவும் கூறப்படுகிறது.

முனியாண்டிக்கு காலில் பலத்த காயமும் வரதன் கங்காணிக்கு தலையில் கடும் காயமும் ஏற்பட்டுள்ளது.

RAY-O-VAC RAY-O-VAC RAY-O-VAC RAY-O-VAC RAY

மொத்த விற்பனை விநியோகஸ்தர்கள்:

- மில்லர்ஸ் லிமிட். கொழும்பு.
- எம். கே. ஏ. ஹமீது அன் கோ, குருணகலை.
- என்.எச். குமாரசிங்க அன் கோ, காலி.
- கபூர்ஸ் ஹார்ட் வெயார், இரத்தினபுரி.
- யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம், யாழ்ப்பாணம்
- எச். ஏ. பகஸ்ராவல அன் பிரதர்ஸ், பதுளை.
- எஸ். கே. பீட்டர் அப்பு அன் பிரதர்ஸ், பதுளை.
- எஸ். ஏ. செல்வநாயகம் அன் சன்ஸ் மட்டக்களப்பு.

பன்மடங்கு சிறந்த பாட்டரி இதுவே

பலமணித்தியால அதிக உத்தரவாத சேவை

யளிப்பதும் இதுவே

சக்தி பலம்




முன்னெப்பொழுதையும் விட எவ்வளவோ முன்னேற்றம்!

Y-O-VAC RAY-O-VAC RAY-O-VAC

# வவனியாவில் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி

வவனியா, செவ்வாய்

வவனியாவில்நடாத்தப்பட்டு வரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் ஒலிம்பிக் கிளப், ஐக்கிய விளையாட்டுக் கழகம், றேமாஸ்கிளப், கமத்தொழில் பாடசாலை, அரசினர் மகாவித்தியாலயம், முல்லைத்தீவு ஆகிய ஆறு உதைபந்தாட்டக் கழகங்கள் பங்குபற்றுகின்றன.

வவனியா ஒலிம்பிக் கிளப்புக்கும்,கிருஷிகப்பாடசாலைக்குமிடையில் நடைபெற்றபோட்டியில் 5-3 கோல்களால் ஒலிம்பிக் கழகம் வெற்றியீட்டியது. மத்தியஸ்தராக திரு. எம். அந்தோனிப்பிள்ளை கடமையாற்றினர்.

முல்லைத்தீவுக் கழகத்துக்கும் வவனியாக் கிருஷிகப்பாடசாலைக்குமிடையில் நடைபெற்ற போட்டி வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது. மத்தியஸ்தராக திரு. கே. சி இராசசிங்கம் கடமையாற்றினர்.

வவுனியா ஐக்கிய விளையாட்டுக் கழகத்துக்கும் வவனியா மகா வித்தியாலயத்துக்கும் இடையில் நடைபெற்ற போட்டியில் ஐக்கிய விளையாட்டுக் கழகம் 6—0 கோல்களால் வெற்றியீட்டியது.

—

## குடியைக் குறைக்க தேசிய வாரம்

கொழும்பு, செவ்வாய்

அளவுக்கு மிஞ்சிய குடிப்பழக்கத்தில் ஈடுபடுவதைத் தடுக்கும் நோக்கமாக தேசிய வாரமொன்றைக் கொண்டாடுவதற்கு ஒரு சில தொழிற்சங்கங்கள் ஒழுங்குகள் செய்துள்ளன. நாட்டில் குடிப்பழக்கத்தைக் குறைப்பதுவே இதன் நோக்கமாகும். இத்தேசிய வாரம் நவம்பர் 19-ம் திகதியன்று ஆரம்பமாகும். இந்த நாளன்று இலங்கை வானொலி ஆங்கிலம், தமிழ், சிங்களம் ஆகிய மூன்று மொழிகளிலும் இதுபற்றிய பேச்சுக்கள் ஒலிபரப்பப்படும்.

அளவு மீறிக் குடிப்பதன் தீமைகள் பற்றிய அறிவுரைகளைப் பள்ளிக்கூடப்பிள்ளைகளுக்கு எடுத்துக் கூறுமாறு கல்வி மந்திரி கேட்டுள்ளார். தேசிய வாரத்தை வெற்றிகரமாக நடாத்துவதற்கு ஒத்துழைக்குமாறு சுகாதார டைரக்டர் சுகாதார அதிகாரிகளைக் கேட்டுள்ளார். கிராம அபிவிருத்தி டைரக்டரும் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் அனைத்தையும் இவ்விதம் கேட்டுள்ளார்.

—

## வானொலி நிகழ்ச்சிகள்

கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00,இரவு 9-00)

வியாழன் 16-10-61

காலை 6-50 உதயகீதம், 6-45 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 தேர்ந்தஇசை, 7-30 திரைஇசை, 8-00 ஜலதரங்கம்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 ஒலிப்பதிவுகள், 5-45 திரைஇசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 வயலின்.

இரவு 7-00 தமிழ் மூலம் சிங்களம் - 8, 7-15 நேயர் விருப்பம், 8-00 முஸலிம் நிகழ்ச்சி, 9-15 வாத்தியக் கோஷ்டி, 9-30 தேர்ந்தஇசை 10-00 தமிழோசை (பி. பி. ஸி. அஞ்சல்.

## வடிசாராயப் பொருள்கள் கட்டுப்பாடு

கொழும்பு, செவ்வாய்

கள்ளச் சாராயம் தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படும் சில பொருள்களின் விற்பனையைக் கட்டுப்படுத்துவதற்கு உள்நாட்டமைச்சு ஆலோசனை செய்து வருகிறது.

நவம்பர் 20-ம் திகதியன்று அமைச்சு கூட்டவிருக்கும் மகாநாட்டில் இவ்விஷயம் பற்றிப் பேச்சுவார்த்தைகள் நடாத்தப்படும். மகாநாட்டுக்கு கைத்தொழில் உள் நாட்டுக் கலாச்சார மந்திரி தலைமை வகிப்பார்.

## வதிரி டயமன்ட் கோஷ்டி வெற்றி

வதிரி, புதன்

வதிரி டயமன்ட் விளையாட்டுக்கழகத்திற்கும் வதிரி தேவரையாளி இந்துக்கல்லூரி விளையாட்டுக் கோஷ்டிக்குமிடையில் ஓர் சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டி நடைபெற்றது.

வதிரி டயமன்ட் விளையாட்டுக்கழகத்திற்கு நா. லோகநாதனும், தேவரையாளி இந்துக் கல்லூரிக்கு எம். கிருஷ்ணகாந்தனும் தலைவர்களாக இருந்தனர்.

போட்டி, ஆரம்பத்தில் இருந்து இறுதிவரை மிகவும் விறுவிறுப்பாக இருந்தது.

போட்டி ஆரம்பத்திலேயே ஒரு கோலைப் போட்ட டயமன்ட் கோஷ்டியினர் இடைவேளைக்கு முன் மூன்று கோல்களைப் போட்டார்கள். இடைவேளைக்குப் பின்பும் டயமன்ட் வீரர்கள் இரண்டு கோல்களைப் போட்டு எண்ணிக்கையை ஐந்து ஆக்கினார்கள். இறுதியில் வதிரி டயமன்ட் கோஷ்டி இந்துக் கல்லூரியை 5—0 கோல்களினால் தோற்கடித்தது. எம். எஸ். கே. நாதன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

—

## கூட்டுறவுச் சங்கம் கட்டுப்பாட்டு விலையை மீறியது

களுத்துறை, செவ்வாய்

கட்டுப்பாட்டு விலையை மீறி வியாபரம் செய்ததற்காக அபராதம் விதிக்கப்பட்ட ஸ்தாபனங்களில் டுவேகொடா பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமும் ஒன்றாகும். களுத்துறை அரசாங்க அதிபர் திரு. டபிள்யு. பத்திரான கட்டுப்பாட்டு விலைக்கு அதிகமாக வியாபரம் செய்தபலர் மீது தண்டம் விதித்தார். அவர்களில் ஒன்றாக டுவேகொடா பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமும் குற்றமடிக்கப்பட்டுள்ளது. கூட்டுறவுச் சங்கம் கட்டுப்பாட்டு விலைக்கு அதிகமாகக் கருவாடு விற்பனை செய்ததாகத் தெரிகிறது. கருவாட்டைத் தாம் சுத்தஞ்செய்ய வேண்டியிருந்ததாகவும் அதன் விளைவாக நிறையில் குறைவு ஏற்பட்டதற்குத் தாம் கருவாட்டில் விலையைக் கூட்டி விற்க வேண்டியிருந்ததென்றும் கூட்டுறவுச் சங்கத்தினர் விளக்கம் கூறியுள்ளனர். கால் றாத்தல் நெத்தலிமீனின் கட்டுப்பாட்டு விலை 19 சதமாக இருக்க அவர்கள் 20 சதத்துக்குக் கால் றாத்தல் நெத்தலி விற்றுள்ளார்கள். இவ்வாறே ஏனைய கருவாட்டு வகைகளையும் அதிக விலைக்கு விற்றுள்ளார்கள். அரசாங்க அதிபர் பல தனி வியாபாரிகள் உள்பட கூட்டுறவுச் சங்கத்தினருக்கும் குற்றமடித்தார்.


நான் விரும்புவது

நெஸ்டோமோல்ட்

அது எனக்கு எவ்வளவோ நன்மையளிக்கின்றது...




நெஸ்டோமோல்ட் ஒரு உன்னத பால் ஆகாரம் இது மோல்ட்டட் பார்லி மற்றும் கோதுமை மாவுடன் முழுப் பாற்கட்டிகளை ஒன்று சேர்த்து கவனமாகத் தயாரிக்கப்பட்ட ஒரு உற்பத்தியாகும். இதில் விட்டமின் A, B2, மற்றும் E அதோடு கல்ஸியம், மக்னீஸியம், ஆகியவற்றின் பெருமதியான ஓர்கனிக் பொஸ்பேட்டுகள்மற்றும் ஒவ்வொரு அவுன்ஸ் பவுடருக்கும் 137 மேலதிக விட்டமின் B சத்துக்கள் உள்ளன.

உற்பத்தி செய்து உத்தரவாதமளிப்பவர்கள்

**நெஸில்ஸ்**

இலவச சாம்பிள்

இலவச நெஸ்டோமோல்ட் சாம்பிளைப் பெற உங்களது பெயர் விலாசத்தையும் அதோடு தபால் கட்டணமாக 25 சதத்திற்கு முத்திரைகளும் அனுப்பி வைக்கவும்.

நெஸில்ஸ் புரோடக்ட்ஸ்
(சிலோன்) லிமிட்டெட்
த. பெ. 189,
கொழும்பு.

குழந்தைகள், வாலிபர், குடும்பப் பெண்கள் ஆகிய எல்லோருமே விரும்பி அருந்தும்இந்த நெஸ்டோமோல்ட் அபார நன்மை அளிக்க வல்லது. சூடானுலென்ன, ஐஸ் போன்ற குளிர்மையானுலென்ன, இழந்த சக்தியை மீட்டுத் தரவும் ஊக்கமூட்டவும் சுவை நிரம்பிய நெஸ்டோமோல்டுக்கு நிகர் எதுவுமே கிடையாது. நெஸ்டோமோல்டில் ஒரு ஆச்சர்யமென்னவென்ருல், உங்களுக்கு நன்மையானவை யாவும் அதில் அடங்கியிருப்பதுதான். இத்தனைக்கும் அதன் சுவை ஒரு தனி ரகம்.

**நெஸ்டோமோல்ட்**

விட்டமின் B அடங்கியது

# தொழிலாளர் சம்பளம் சம்மேளனக் கூட்டம் வரையறை செய்யும்

கொழும்பு, வியாழன்

கம்யூனிஸ்ட் கட்சியின் கட்டுப்பாட்டுக்குள்ளான இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனத்தின் 15வது வருடாந்தக் கூட்டத்தில் தொழிலாளர் சம்பளங்கள் வரையறை செய்யப்படவிருக்கின்றன. சம்பளக் கமிஷனின் சிபார்சுகளின் அடிப்படையில் தொழிலாளர் சம்பளங்கள் நிர்ணயிக்கப்படவேண்டும்என இலங்கைத் தொழிலாளர் தொழிற்சங்க சம்மேளனம் கோரவிருக்கிறது. இன்று ஆரம்பமாகும் இலங்கைத் தொழிலாளர் தொழிற்சங்க சம்மேளனத்தின் வருடாந்தக் கூட்டம் மூன்று நாள் நீடிக்கும். ரஷ்யா, இந்தோனேஷியா, இந்தியா, ஜெர்மனி ஆகிய நாடுகளிலிருந்து தூதுகோஷ்டியினர் இக்கூட்டத்தில் கலந்துகொள்வர் எனத் தெரிகிறது. கூட்டத்தில் நிறைவேற்றப்படவிருக்கும் பிரதான தீர்மானம் தொழிலாளர் கோரிக்கைகளை கொண்டுள்ளது.

அகில இலங்கைத் தொழிலாளர் தொழிற்சங்க சம்மேளனம் தொழிலாளர் சம்பளம் கீழ்வருமாறு நிர்ணயிக்கப்பட வேண்டுமென அரசாங்கத்திடம் கேட்கவிருக்கிறது.

திறமையற்ற தொழிலாளி ஒருவரின் மாதாந்தச் சம்பளம் குறைந்தது 135 ரூபாயாக இருக்கவேண்டும். ஓரளவு திறமையுள்ள தொழிலாளிக்கு மாதாந்தம் 160 ரூபாய் சம்பளம் வழங்கப்படவேண்டும். அதிக திறமையுடைய தொழிலாளி ஒருவருக்கு மாதாந்தம் 180 ரூபாய் சம்பளம் வழங்கப்படல்வேண்டும்.

# 31 மரியாதைக் குண்டுகளுடன் நேருவுக்கு வரவேற்பு

## இந்தியப்பிரதமர் - மெக்ஸிக்கோ அதிபர் சம்பாஷணை

மெக்ஸிக்கோ, நவ. 15

**மெக்ஸிக்கோ வந்துசேர்ந்த பிரதமர் நேருவுக்கு அளிக்கப்பட்ட மகத்தான வரவேற்பு, மெக்ஸிக்கோவின் சரித்திரத்திலேயே எவருக்கும் அளிக்கப்படவில்லையென அறிவிக்கப்படுகிறது. கோலாகலமான வரவேற்பின்போது 31 மரியாதைக்குண்டுகள் தீர்க்கப்பட்டன.**

விமான நிலையத்தில் மெக்ஸிக்கோ அதிபர் திரு' நேருவை வரவேற்றுப் பேசுகையில், "மெக்ஸிக்கோ மக்கள் தங்களை இதயபூர்வமாக வரவேற்கின்றார்கள். இருள் சூழ்ந்த உலகுக்கு ஒளியூட்டும் மணி விளக்காக விளங்கும் உங்களை வரவேற்க நான் பெருமைப்படுகிறேன்" என்றார்.

பின் இரு தலைவர்களும் சந்தித்து ஒரு மணி நேரம் சம்சம்பாஷணை நடத்தினர். சமாதானப் பணிக்கு இரு நாடுகளும் இடைவிடாது பாடுபட வேண்டும் என்னும் விஷயத்தில் இருதலைவர்களும் ஒன்றுபட்டதாக மெக்ஸிக்கோ வெளிநாட்டு மந்திரி அறிவித்தார்.

திரு. நேருவுக்கு நல்வரவு கூறி மெக்ஸிக்கோ பத்திரிகைகள் பிரமாதமாகப் பிரசுரித்திருந்தன. சமாதானத்தை வளர்க்கும் மாபெரும் தலைவர்' எனப் பல பத்திரிகைகள் வர்ணித்திருந்தன. லாஸ்ஏஞ்சல்ஸிலிருந்து ஸ்ரீ நேரு புறப்பட்ட போது நகரமேயர் உட்பட பெருந்திரளானமக்கள் அவரை மெக்ஸிக்கோவுக்குவழிஅனுப்பி வைத்தனர். அதற்குமுன் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் லாஸ் ஏஞ்சல்ஸ்நகரின் கௌரவப் பிரஜா உரிமை வழங்கப்பட்டது.

## தமிழர் பெருமையை...

(1ம் பக்கத்தொடர்ச்சி)

விட்டமுள்ள வில்மச்சு மண்டபங்களும் அவசியமாக இருக்கின்றது. இம்மூன்று வில்மச்சு மண்டபங்களைக்கட்டி முடிப்பதற்கு ரூபா 119,950 - 00 தேவைப்படுகின்றது. எனவே, எல்லாமாக ரூபா127,737 - 54 சதம் தேவைப்படுகின்றது.

நூல்நிலையக் கட்டடத்தை நிறைவேற்றியதுடன் நூல்நிலையம் அமைத்ததாகக் கருத இயலாது. நூல்நிலையம் சீராக இயங்குவதற்கு வேண்டிய நூல்களும் இக் காலத்திற்கேற்ற நூல்நிலையத் தளவாடங்களும் அவசியம் வேண்டும். இத்துடன் நமது நூல்நிலையத்தில் சிறுவர் நூல்நிலையம் ஒன்றினையும் ஆரம்பிக்கவேண்டுமெனத் தீர்மானித்துள்ளோம். இவற்றுக்கெல்லாம் போதியளவு பணம் தேவைப்படுகின்றது.

ஒரு நாட்டுமக்களின் பண்பாடு, நாகரிகம், கல்வி, சமயம், கலை ஆகியவை வளர்ச்சி பெறுவதற்கு நூல்நிலையம்இன்றியமையாதது என்பதை இக் காலத்தில் எவரும்மறுக்கமுன்வரார். ஈழநாட்டில் தமிழ் பேசும் மக்களின் பண்பாட்டையும் மொழியையும் கலைகளையும் சீரிய முறையில் பாதுகாத்து வளர்த்தற்குத் தமிழ்பேசும் மக்களின் தலைநகராக விளங்கும் யாழ்ப்பாணத்தில் சிறந்த நூல்நிலையம் அமைத்தல் மிக அவசியம்.

எனவே, நூல்நிலைய இயக்கத்தாரால் ஆரம்பிக்கப்பட்ட இந் நூல்நிலையத்தைப் பூர்த்தி செய்துவைப்பது அபிமானமுள்ள மக்கள் ஒவ்வொருவரதும் கடமையாகும்.

## மசோதா அமுலானல்.-

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கோர்ட்டில் தாமதமின்றி விசாரணை செய்யவும் இந்தமசோதா வழிசெய்கிறது."

செனட்டர் மாணிக்கம் பேசுகையில் கூறியதாவது:-

"இந்த நாட்டில் சட்டவிரோதக் குடியேற்றக்காரர் வருவதை எவரும் விரும்பவில்லை. ஆனல் குற்றமற்ற மக்களைக் கொடுமைப் படுத்தக்கூடிய மசோதா கொண்டுவருவதைத் தான் நாம் எதிர்க்கின்றோம். வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இராணுவத்தினர் நடந்துகொள்ளும் முறைபற்றி விசாரணை செய்தால் நீங்கள் இதை அறிந்து கொள்ளலாம்.

தடுப்பு முகாமில் வைக்கப்பட்டிருந்தவர்களெல்லோரும் விடுதலை செய்யப்பட்டதாக பிரதம மந்திரி தெரிவித்தாலும் மன்னாரில் ஒருவர் இன்னும் தடுப்புமுகாமில் வைக்கப்பட்டுள்ளார். இந்த மசோதா நிறைவேற்றப்பட்ட பின்னர் நாட்டைவிட்டு வெளியேற்றுவதற்காக அரசாங்கம் அவரை இவ்வாறு வைத்துள்ளதா?

செனட்டர் ஜி. நல்லையா கூறியதாவது:-

இங்குள்ள மக்கள் எல்லோருக்கும் அடையாளக் கார்டுகள் வழங்கப்பட்டால் இந்தச்சிக்கலை ஒருவாறு நீக்கலாம்.

இந்த மசோதா அமுலாக்கப்பட்டால் இந்த நாட்டவர்கள் குறிப்பாக தமிழர்களும் முஸ்லிம்களும் பெரும் கஷ்டத்துக்குள்ளாக வேண்டிவரும்.

பொலிஸாருக்கும், ராணுவத்தினருக்கும் அதிக அதிகாரங்கள் அளிக்கப்பட்டுள்ளன. எனவே இந்த மசோதாவினல் மக்களுக்குப் பெரும் கஷ்டமேற்படும்.

சில தமிழ்ப் பகுதிகளில் பொலிஸாரும் இராணுவத்தினரும் ஏதுமறியாத தமிழ், முஸ்லிம் மக்களைத் துன்புறுத்துகின்றனர். முக்கியமாக இப் பகுதியில் வாழும் பெண்கள் ஆபத்தான நிலையிலுள்ளார்கள்.

தமிழர்கள் சட்டவிரோதக் குடியேற்றக்காரருக்குப் பாதுகாப்பளிக்கக்கூடாது."

# இருதய நோய்களால் ஆண்களே அதிகம் இறக்கின்றனர்

கொழும்பு, புதன்

இருதய நோய்களினல் பெண்களிலும் பார்க்க ஆண்களே அதிகமாக மரணமாகின்றார்கள். பெண்களிலும் நாலு மடங்கு அதிகமாக ஆண்கள் இருதய நோய்களினல் மரணமாகிறார்கள். எனச் சுகாதார இலாகாவின் ஆராய்ச்சியொன்றினல் தெரிய வந்துள்ளது. இவ்வாராய்ச்சியின் போது பின்வரும் விபரமும் கிடைத்துள்ளது.

40 வயதான பின்னர் மரணமாகும் பெண்களில் 6 பேருக்கு ஒருபெண் விகிதம் இருதய நோயினலேயே மரணமாகின்றனர்.

உலக சுகாதார இயக்கம் சில வருடங்களுக்கு முன்னர் 24 தேசங்களில் ஆராய்ச்சி நடாத்தியது. இதன் பேரில் இருதய நோயினல் பெண்களில் பார்க்க ஆண்கள் 3 தொடக்கம் 4 மடங்குவரை அதிகமாக இருதய நோய்களினல் மரணமாகின்றனர் எனத் தெரிய வந்தது.

## மனேச்சர் தேவை

வருத்தலை விளான் பலநோக்கக் கூட்டுறவுச் சங்கத்துக்குக் கூட்டுறவுப் பயிற்சியும், வியாபாரஅனுபவமுமுடைய மனேச்சர் ஒருவர் 1 - 12 - 61 தொடக்கம் தேவை.

விபரங்கள்

பெயர்:-

வயது:-

விலாசம்:-

பயிற்சி அத்தாட்சிப் பத்திரம்:-

வியாபார அனுபவ நற்சாட்சிப் பத்திரப் பிரதிகள்:-

பிணை ரொக்கம் ரூ. 1000 அல்லது ஆதனப் பிணை ரூ. 2000. சம்பளம் ரூ. 90. விண்ணப்பம் அனுப்பும் கடைசித் திகதி:- 25-11-61.

விண்ணப்பம் அனுப்பும் விலாசம்:- கௌரவ காரியதரிசி, பலநோக்கக் கூட்டுறவுச் சங்கம், வருத்தலைவிளான், தெல்லிப்பழை.

# பென்ஷன் வழங்குமாறு முன்னுள் மந்திரி கோரிக்கை

## "பிறர்தயவில் வாழ்வது கௌரவமல்ல"

கொழும்பு, புதன்

முன்னுள் கல்வி மந்திரி திரு. டபிள்யு. டபிள்யு. கன்னங்கரா தமக்கு பென்ஷன் வழங்குமாறு அரசாங்கத்திடம் கேட்டுள்ளார்.

அவர் இது சம்பந்தமாக அரசாங்கத்துக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் தெரிவித்துள்ளதாவது:

"எனக்கு முதலீடுகளோ, வீடு, காணி அல்லது வேறு எந்த வகையாலோ எதுவித வருமானமும் கிடையாது சில வருடங்களாக நண்பர்கள் அனுதாபிகள் ஆகியோரின் பண உதவியினல் தான் வாழ்க்கையை நடாத்தி வந்துள்ளேன்.

நண்பர்கள், உறவினர் ஆகியோரின் தயவை எதிர்பார்த்து வாழ்வது மந்திரிப் பதவி வகித்த ஒருவரின் கௌரவத்துக்கு ஏற்றதல்ல என நான் கருதுகிறேன். எனது முக்கிய தேவைகளை இந்தப் பென்ஷன் பணம் மூலமாகவே பூர்த்தி செய்யக்காத்திருக்கிறேன்."

இலங்கை கலைக்கழக தமிழ் நாடகப் போட்டியில்

# மூவருக்குப் பரிசு

## இம்மாதம் 19-ந் திகதி பரிசளிப்பு வைபவம்

யாழ்ப்பாணம், வியாழன்

இலங்கை கலைக்கழக தமிழ் நாடகக் குழுவினரால் இவ்வாண்டு நடாத்தப்பட்ட நாடகப் போட்டியில் "சொக்கன்" எழுதிய 'சிங்ககிரிக் காவலன்' முதலாவது பரிசாகிய ரூ. 500 பெற்றுள்ளது.

இப் போட்டியில் இரண்டாவதாக எஸ். பொன்னுத்துரை எழுதிய "முதல் முழக்கம்" என்றநாடகமும்' மூன்ருவதாக யாழ்ப்பாணம் தேவன் எழுதிய "கூடப்பிறந்த குற்றம்" என்ற நாடகமும் தெரிவுசெயயப்பட்டிருக்கின்றன. இவற்றுக்கு முறையே ரூ. ரூ. 150 பரிசளிக்கப்படும்.

ஹவ்லக் டவுன் பாடசாலை மண்டபத்தில் இம்மாதம் 19-ந் திகதி கலாநிதி சு. வித்தியானந்தன் தலைமையில் நடைபெறவிருக்கும் பரிசளிப்பு வைபவத்தில் பரிசுபெற்ற இந் நாடகாசிரியர்களுக்கு பேராசிரியர் கே. கணபதிப்பிள்ளை பரிசில்களை வழங்குவார்.

இப்பொழுது திரையிடப்படுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு)

மற்றும் 5 திரைகளில்

வீரம் நிறைந்த வெற்றிக்காவியம்!

என். டி. ராமராவ் • பி. கண்ணும்பா

ராஜசுலோசன • பாலாஜி

எஸ். வி. சகஸ்ரநாமம் • ராஜகோபால்

ஆகியோர் நடித்த



வாஹினியின் ராஜமகுடம்

தயாரிப்பு & டைரக்ஷன் பீ.என். ரெட்டி

இப்பொழுது திரையிடப்படுகிறது!

மனோஹரா (யாழ்ப்பாணம்) மாலை 6-30 இரவு 9-30

ரஞ்சன் - பானுமதி

நடித்த

நிசான்

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம்இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு நவம்பர் மாதம் 16ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.